RE/MAX REALTRON BLUE FORCE — TEAM BLUE FORCE — BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage "Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage


GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 22 டிசம்பர் 2023 இதழ்:- 32

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# கனடாவில் கொன்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் இலங்கையில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராகத் தடைகள் - கட்சித் தலைவர் தெரிவிப்பு



கனடாவில் கென்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத் தால் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங் கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத்து வோம் என கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு மின்னிதழில் பார்க்க
eelanadu.ca

# நல்லிணக்க முயற்சி சகல தரப்பினரது ஆதரவுடன் அரசியல் தீர்வு முயற்சியாகவும் மாற வேண்டும் - அமெரிக்கத் தூதர்

இலங்கையில் அரசியல் தீர்வு எதுவாக இருந்தாலும் அது உண்மையில் எல் லாத் தரப்பினரதும் நல்லிணக்க முயற்சி யாக அமைய வேண்டும். இது சாத்தியமானது என்றே நான் நினை க்கின்றேன். ஆனால் இதில் கடின உழைப்பு அவசியமாகிறது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித் தார். (8ம் பக்கம் பார்க்க)






# "சரிகமப" போட்டியில் வெற்றி பெற்ற ஈழத்து இசைக்குயில் கில்மிஷா

# கனேடிய தமிழ் காங்கிரஸ் மகிந்தாவுடன் சந்திப்பு!

## நம்ப முடியாத துரோகம் என கனடா தமிழ்ச் சமூகம் கொந்தளிப்பு!

கனேடிய தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டுள்ளமை குறி த்து கனடா தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்கள் கடும் ஏமாற்றமும் சீற்றமும் வெளி யிட்டுள்ளனர் இது குறித்து தமிழ்கார்டியன் தெரிவித்துள்ளதாவது.(9ம்பக்கம்)

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# WISHING YOU AND YOUR FAMILY A JOYFULL

# HAPPY HOLIDAYS AND A PROSPEROUS YEAR 2024

**THANK YOU TO ALL OF MY CLIENTS, FAMILY, AND FRIENDS FOR TRUSTINGME WITH YOUR REAL ESTATE NEEDS DURING THE LAST 21 YEARS.**

*We hope to continue working with you in the future*




**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N & Conlin Rd**

Oshawa $279,000
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

**Warden/Steeles**

Scarborough $760,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space

**Bathurst & Mulock**

Newmarket $788,000
Bedrooms: 3 Washrooms: 2
End unit with Beautiful Surroundings

**Hwy 115/Hwy 2/Hwy 401**

Clarington $1,095,000
Bedrooms: 4 Washrooms: 3
Premium Private Lot!

**Kennedy Rd & Bovaild Dr. E**


Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
Renovated to separate entrances

**Eglinton Ave & Danforth Rd**

Toronto $1,150,000
Bedrooms: 4 Washrooms: 4
End Unit Townhouse,Seconds To TTC


**Woodbine Ave & Mt Albert Rd**

East Gwillimbury $1,250,000
Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage

**Simcoe St / Buckingham**

Oshawa $1,349,998
Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa

**Bayly St/West Shore Blvd**


Pickering $3,350
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Bungalow, Near 401

**Kennedy/401**


Scarborough $2,700
Bedrooms: 2 Washrooms: 2
Open concept kitchen, lots of storage

**Avenue & Lawrence**


Toronto $2,350
Bedrooms: 1 Washrooms: 1
Brand New Unit. All Stainless Applia

**Altona Rd & Twyn Rivers Dr**


Pickering $2,000
Bedrooms: 2 Washrooms: 1
Well Maintained Basement Suite

*Looking for more house?*

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவில் கொன்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் இலங்கையில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக தடைகள் - கட்சித் தலைவர் தெரிவிப்பு



கனடாவில் கென்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத் தரணிகளை பயன்படுத்துவோம் என கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார்

கனடாவின் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் கனடாவில் கென்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் தமிழர்கள் இனப்படுகொலை தொடர்பில் என்ன நிலைப் பாட்டை எடுக்கவுள்ளீர்கள் என்ற கேள்விக்கு பதில ளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

1980களில் கனடாவிற்கு பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர் களை முதலில் வரவேற்றவர் கென்சவேர்ட்டிவ் கட்சியின் அப்போதைய பிரதமர் பிரையன் மல்ரோனி.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முதலில் சர்வதேச தடைகளை விதித்தது கொழும்பில் இடம்பெற்ற பொது நலவாய உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளாமல் வெளி யேறி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை அவமானப் படுத்தி யது பிரதமர் ஹார்ப்பர் அரசாங்கமே.


இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாங்க உறுப்பினர்களிற்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பதே தற்பொது என திட்டம். இதன் மூலம் சர்வதேச தடைகள் ஊடாக அவர்களது தனிப்பட்ட நிதிகளை முடக்கலாம். (22ம் பக்கம் பார்க்க)

# எம்மால் இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது ஜப்பான், சுவிஸ், தென்னாபிரிக்கா தூதுவர்கள் தெரிவிப்பு!

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபிக்கும் முயற்சியில் நாம் அரசாங்கத்துக்கோ பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல் லது அதன் பிரதிநிதிகளுக்கோ அழுத் தங்களை பிரயோகிக்க முடியாது என்று ஜப்பான் தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து இராஜதந்திரிகள் தெரி வித்துள்ளனர்.

வடக்கிற்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சுவிட்சர்லாந்து தூதுவர் சிரி வொல்ட் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சாண்டில் ஷால்க் ஆகியோருக்கும் தமிழ் கட்சிகளின் வடமாகணத்தைச் சேர்ந்த ஏழு பாராளுமன்ற உறுப் பினர்களுக்கும் இடையில் 16 டிசம்பர் 2023 இரவு யாழில் உள்ள தனியார் விடுதியில் சந்திப்பொன்று நடைபெற் றது.

இதன் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்ட மேற்படி மூன்று நாடுகளின் இராஜதந்திரிகளும்



ஈற்றில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினார்கள். இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்த னர். அவர்கள் அங்கு மேலும் தெரி விக்கையில்,

நாங்கள் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின் றோம். அந்த வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை யொன்றை ஸ்தாபிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எம்முடனான கலந்துரை யாடல்களில் இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. அந்த வகை யில் நாம் அனைத்து தரப்பினரு டனும் கலந்துரையாடல்களை மேற் கொள்கின்றோம். எம்முடனான கலந் துரையாடல்களின் போது சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை நாம் அரசாங்கத்திடம் அவ்வாறே குறிப் பிடவுள்ளோம். அவ்விடயங்களுக்கான தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும், எதிர்பார்ப்புக்களை யும் வெளிப்படுத்துவோம்.

(22ம் பக்கம் பார்க்க)

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ட்ரம்புக்கு தடை!



2024ஆம் ஆண்டு நடைபெற இரு க்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்த லில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவ தற்கு கொலராடோ (Colorado) உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அதன்படி டொனால்ட் ட்ரம்ப் அமெ ரிக்க ஜனாதிபதியாக பணியாற்றுவ தற்கு தகுதியற்றவர் என்றும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி அன்று அமெரிக்க தலைநகர் மீது அவரது ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலில் அவருக்கு பங்கு இருப் பதால் காரணமாக கொலராடோவில் போட்டியிட முடியாது என்றும் நீதி மன்றம் செவ்வாயன்று தீர்ப்பளித்துள் ளது. அமெரிக்க அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதி வேட்பாள ரொருவர் தகுதி நீக்கம் செய்யப்படு வது இதுவே முதல் தடவையாகும் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டு ள்ளன. இதேவேளை இந்திய குடி யரசு தின விழாவில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமை விருந்தினராக பங்கேற்க வாய்ப் பில்லை என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன. இந்திய குடியரசு தின விழா வில் (2024) தலைமை விருந்தி னராகப் பங்கேற்க வருமாறு ஜோ பைடனுக்கு, பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார். எனவே அவர் இந்தியாவுக்கு வர வாய்ப்புள்ளதாக கடந்த செப்டம்பரில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி தெரிவித்தார்.

ஆனால் ஜோ பைடனின் இந்தியப் பயணம் குறித்து வெள்ளைமாளிகை தரப்பில் உறுதியான தகவல் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தீர்வு விடயத்தில் நாம் இன்னும் இந்தியாவை நெருக்கவில்லை நான் கட்சித் தலைவரானால் புதுடில்லியில் பணிமனை! சுமந்திரன் தலைவரானால் முழுவீச்சுடன் செயற்படுவேன்!

## ஶ்ரீதரன் எம்.பி மனம் திறந்த உண்மை நிலவரம்



இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் நாங்கள் இன்னமும் இந்திய அரசை நெருங்கவில்லை. மோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வளர்க்க வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் உண்டு. தமிழரசு கட்சியின் தலைவராக நான் தெரிவானால், புதுடில்லியில் பணிமனை ஒன்றை அமைத்து இந்தியாவுடன் நெருங்கி செயல்படுவதற்கான பணியையே முதலில் ஆரம்பிப்பேன் இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கு போட்டியிடும் வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார் அத்துடன் தமிழரசு கட்சியின் தலைமையை நான் பெற்றாலும் இரண்டு வருடங்களே தலைவராக இருப்பேன். தலைமைக்கான போட்டியில் எம். ஏ. சுமந்திரன் வெற்றிபெற்றால் நான் அவரின் கீழ் இன்னும் முழுவீச்சுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளேன் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியின் ஸ்பொட்லைற் நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த விடயங்களின் முக்கிய அம்சங்கள் வருமாறு –

தமிழரசு தலைமை எழுதிக் கொண்டு வந்து வாசித்து தலைவர்களை நியமித்த பாரம்பரியத்தை மாற்றி முதன்முதலாக ஜனநாயக பண்பியல்புக்கு ஏற்ப தமிழரசு கட்சி தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இது ஆரோக்கியமான போட்டி. இதன் மூலம் தமிழரசு கட்சிக்கு திறமையான தலைவர் தெரிவாவார். இந்த ஜனநாயக தலைமையை மக்களும் ஏற்றுக் கொள்வார்கள். நான் கட்சியின் தலைவராவேன் என்று 100சத வீதம் நம்புகிறேன். சுமந்திரன் கட்சித் தலைவராக தெரிவானாலும் அவரின் கீழ் கட்சிக்கான செயல்பாடுகளை இன்னும் முழுவீச்சுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளேன் என்றார்.

நாம் இந்தியாவை நெருங்கவில்லை இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் நாம் இன்னும் இந்தியாவை நெருங்கவில்லை. மோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வளர்க்க வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் உண்டு. இதனை அண்மையில் நான் புதுடில்லிக்கு சென்றபோது உணர்ந்திருந்தேன்.

இந்தப் பயணம் புதுடில்லிக்கான முதல் பயணமாக அமைந்திருந்தது. அங்கு சென்ற போது தான் புதுடில்லியிலுள்ள இந்திய கொள்கை வகுப்பாளர்கள், புத்திஜீவிகளை நாம் இன்னும் அண்மிக்கவில்லை எமது பிரச்சனைகள் அவர்களுக்கு எட்டவில்லை என்பது தெரிந்தது. மோடி அரசுடன் நெருக்கமான உறவை வளர்க்க வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கு உண்டு. எமது ஏனைய கட்சிகளுக்கும் உண்டு.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாங்கள் எள்ளளவும் இந்தியாவை அணுகவில்லை. அதனால் ஏற்பட்ட வெற்றிடம் புதுடில்லி பயணத்தின் போது தெரிந்தது. நாங்கள் புதுடில்லியில் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய தரப்புகளை சந்தித்தோம். ஈழத்தமிழர்கள் தொடர்பில் அவர்கள் மத்தியில் எதிரான மனநிலையே காணப்பட்டது. எங்கள் உண்மையான பிரச்சனைகளையும் இங்கு நடக்கும் ஆக்கிரமிப்புகளையும் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய நிலைமையே இருந்தது. நாங்கள் புதுடில்லியில் பணி மனை ஒன்றை அமைத்து அங்கு முகாமிட்டிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நான் தமிழரசு கட்சியின் தலைவரானால் முதலில் ஆரம்பிப்பது இந்த வேலையைத் தான். இன்றைய நிலையில் இது எங்களின் தேவையும் கூட.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுடன் நாம் எவ்வளவு அன்னியோன்யமான தொடர்புகளை வைத்திருந்தாலும் இந்தியாவை புறந்தள்ளி அவர்களால் இங்கு எதுவும் செய்ய முடியாது. சமாதான காலத்தில் சமரச பேச்சுக்கான தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் நோர்வேயிலிருந்து இலங்கை வந்த போது புதுடில்லிக்கு சென்றே வந்தார். இதே போன்று இலங்கையிலிருந்து திரும்பும் போதும் புதுடில்லிக்கு சென்றே நோர்வே சென்றார்.

இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் மேற்குலகு எதுவும் செய்யாது என்பது இதிலிருந்தே தெளிவாகிறது. என்னுடன் உயர்மட்ட சந்திப்பில் இருந்த அமெரிக்காவின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தனது சேவைக்காலம் முடிவடைந்து நாடு திரும்பும் போது என்னைச் சந்தித்தார். அப்போது அவர் என்னிடம்,

இந்தியாவுடன் இன்னும் நெருங்கி செயல்படுங்கள் என்றே கூறிச் சென்றார். நாங்கள் இன்னும் அதனைச் செய்யவில்லை. இந்தியாவில் மோடி அரசு ஆட்சியில் இருக்கும் போதே தமிழர் இனப் பிரச்னைக்கான தீர்வை இந்திய பங்களிப்புடன் எட்டுவது இலகுவானதாக இருக்கும் என்று நம்புகிறோம். இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாக பயன்படுத்த வேண்டும் என்றார்.

# தமிழர்கள் எதிர் கொள்ளும் இன ரீதியான பிரச்சனைகள்! அமெரிக்கப் பிரதிநிதியிடம் எடுத்துரைத்த சுமந்திரன்!



அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள், வட கிழக்கில் தொடரும் காணி அபகரிப்புக்கள் என்பன இனவாதப் போக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவும், இவை இன ரீதியிலான பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகவும் இன ரீதியிலான சமத்துவம் மற்றும் நீதி தொடர்பான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் விசேட பிரதிநிதி டிஸிரி எம் கொமியெர் ஸ்மித்திடம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எடுத்துரைத்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள், வட- கிழக்கில் தொடரும் காணி அபகரிப்புக்கள் என்பன இனவாதப்போக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவும், இவை இன ரீதியிலான பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகவும் இன ரீதியிலான சமத்துவம் மற்றும் நீதி தொடர்பான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் விசேட பிரதிநிதி டிஸிரி எம் கொமியெர் ஸ்மித்திடம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எடுத்துரைத்துள்ளார்.

இன ரீதியிலான சமத்துவம் மற்றும் நீதி தொடர்பான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் விசேட பிரதிநிதி டிஸிரி எம் கொமியெர் ஸ்மித் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை நாட்டை சென்றடைந்தார்.

அவர் இலங்கையின் பல்லின சமூகங்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களைக் கேட்டறிதல் மற்றும் அச்சவால்களை முறியடிப்பதற்கான கூட்டிணைந்த வாய்ப்புக்களை அடையாளங் காணல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மலையகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செய்திருப்பதுடன், பொது மக்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார்.

அதன்படி இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனை வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்த டிஸிரி எம்.கொமியெர் ஸ்மித், மலையகப்பகுதிகளுக்கு தான் நேரடியாக விஜயம் மேற்கொண்டதாகவும், எனவே வட, கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைவரம் குறித்துத் தெளிவுபடுத்துமாறும் சுமந்திரனிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்று வரும் இனவாதப் போக்கிலான செயற்பாடுகளும், பெரும்பான்மையின சமூகம் பேரினவாதப்போக்கில் பயணிக்க முற்படுவதுமே இன ரீதியிலான பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று அண்மையில் போரில் உயிரிழந்த அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தமைக்காகப் பலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமை மற்றும் வட, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து இடம் பெற்று வரும் காணி அபகரிப்புக்கள் என்பன பற்றியும், அவை இனவாத அடிப்படையிலேயே இடம் பெறுகின்றன எனவும் அவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பிரதிநிதியிடம் எடுத்துரைத்தார்.

அவற்றை செவிமடுத்த கொமியெர் ஸ்மித், இதனை உரியவாறு கையாள்வதற்கு அமெரிக்க அரசாங்கம் எத்தகைய உதவிகளை வழங்கமுடியும் எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன் அண்மையில் இடம் பெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்பில் அமெரிக்கா உடனடியாகக் கண்டனம் வெளியிட்டமை, 2012 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்தை நகர்த்துவதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றமை போன்றவற்றை உதாரணமாகக் கூறியதுடன், எனவே இவ்விடயத்தில் அமெரிக்கா இயலுமானதைச் செய்து வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ், முஸ்லிம், மலையக அரசியல்வாதிகளுக்கு இடையில் நிலவும் ஒற்றுமை குறித்து அமெரிக்கப் பிரதிநிதி கேள்வி எழுப்பிய போது, ஒவ்வொரு தரப்பினரதும் அடையாளங்கள் வேறுபட்டவையாக இருப்பினும், தமிழர் விவகாரம் என்று வரும்போது அனைவரும் ஒருமித்து செயற்படுவதாக தெரிவித்தார்.

# "சீ தமிழ்" சரிகம போட்டியில் வெற்றி பெற்ற ஈழத்து இசைக்குயில் கில்மிசாவின் வரலாறு






தமிழகத்தின் சீ தமிழ் அலைவரிசையின் சரிகம போட்டியில் எங்கள் இசைக்குயில் கில்மிசா வெற்றி பெற்று விட்டாள். வாழ்த்துகிறேன். கில்மிசாவின் தந்தை அவரது பெற்றோர் யாழ்ப்பாணத்தின் புற நகரான அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

கில்மிசாவின் தாயார் தர்மினி கிளிநொச்சி உருத்திர புரம் எட்டாம் வாய்க்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயார் தர்மினியின் தந்தையார் தர்ம நாதன் அவரது மனைவி லீலாவதி ஆகியோர் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி அல்வாய் வடக்கு துன்னாலை ஆகிய கிராமங்களைப் பரம்பரையாகக் கொண்டவர்கள்.

திரு. தர்மநாதன் ஊரறிந்த ஒரு சமூக சேவையாளர். அவர் பிறந்தது வடமராட்சியில் தான் வளர்ந்தது முழுவதும் கிளிநொச்சியில் தான். கில்சன் கட்டிடங்களுக்கான மணலை அனுமதிப் பத்திரம் பெற்று விற்கும் வாகன உடமை கொண்ட ஒரு தொழிலதிபர். தொழில் நிமித்தம் கிளிநொச்சி சென்று வரும் போது தர்மினியை விரும்பிப் பெற்றோர் சம்மதத்துடன் காதல் திருமணம் செய்து கொண்டார்.

கில்சன் சிறந்த சமூக சேவகராகப் பலராலும் மதிக்கப்படும் ஒருவர். இவரது குடும்பம் யாழ் கண்டி வீதியில் அரியாலையில் வசித்து வருகின்றது. கில்மிசாவுக்கு ஒரு தம்பி உள்ளான். கில்மிசா யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பல துறைகளிலும் திறமை காட்டி வரும் ஒரு மாணவி.

இவர்களது குடும்பம் அரியாலை கலைமகள் சனசமூக நிலைய வீதியில் குடியிருந்த போது கில்மிசாவின் இசைத் திறமையைக் கண்ட இசை ஆசிரியை திருமதி. கமலோஜினி உமாசங்கர் அருகிலுள்ள சரஸ்வதி கோயிலில் பாடலுக்குரிய ஆரம்ப நிலையை எடுத்துக் கொடுத்து ஊக்குவித்தார்.

கில்மிசாவின் தம்பிக்கு ஏடு தொடக்கியது அடியேன் என்பதையும் மகிழ்வுடன் அறியத் தருகிறேன். கில்மிசாவின் இசைத் திறமையைக் கண்ட அரியாலை சாரங்கா இசைக்குழு அவரை ஒரு மழலைப் பாடகராகத் தனது நிகழ்ச்சிகளில் அறிமுகம் செய்தார்கள். அதே வேளையில் அரியாலை கலைமகள் சனசமூக நிலையமும் கில்மிசாவின் இசைத் திறமைக்கு நிறையவே களம் அமைத்துக் கொடுத்தது.

கலைமகள் கிராமமே அவருக்கு ஆதரவாக எப்போதும் நின்றது. தந்தையார் கில்சனை கலைமகள் சனசமூக நிலையம் தனது தலைவராகக் கூடத் தெரிந்து கௌரவித்தது. கில்மிசாவின் தமிழக இசைப் பயணத்துக்கு அவரது பெற்றோரது நிதிப் பங்களிப்புக்கு மேலாக அரியாலை கலைமகள் சன சமூக நிலையமும் ,உறவுகளும் கைகொடுத்து உதவினார்கள்.

போட்டி நடைபெற்ற போதும் போட்டி நிறைவுக்கும் தமிழகம் சென்று நேரில் உடன் பங்களித்தார்கள். தமது இசைமகள் வெற்றி மகளாகத் திரும்பி வர உற்சாகமூட்டினார்கள். கில்மிசாவின் பாடல் திறமையைக் கண்ட இசைக்குழுக்கள் பல தமது மேடை நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்தார்கள்.

எந்தவொரு பாடலையும் மிக இயல்பாக உணர்வுடன் பாடும் அவரது குரல்வளம் அதீதமானது. சீ தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையினர் சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்த போது கில்மிசாவின் திறமையைக் கண்டு தமது நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதாகக் கூறிச் சென்றார்கள். சொன்னபடியே அழைத்தார்கள்.

அசாதாரண திறமையுள்ள கில்மிசா இறுதிப் போட்டியிலும் முதலாவதாக வருவாளென முதல் பாடலான குயில் பாட்டு ஹோ வந்ததென்ன இளமானே ..... பாடல் மூலமாகக் கட்டியம் கூறினார். சொன்னபடியே வென்றார். ரூபா 10 இலட்சம் இந்திய ரூபா பரிசை வென்றுள்ளார்.இசையால் உலகை ஆளும் வல்லமை கொண்டு வளர்வாய் எம் செல்வ மகளே!வாழ்த்துகிறேன்.

நன்றி:- வேதநாயகம் தபேந்திரன் முகநூல் 17 டிசம்பர் 2023

# யாழ்ப்பாண சைவ உணவகம் ஒன்றில் ஒரு கிளாஸ் சுடுதண்ணீர் 100.00 ரூபா

யாழ்ப்பாணத்தில் உணவகம் ஒன்றில் ஒரு கிளாஸ் வெந்நீருக்கு 100 ரூபாய் வசூலித்த சம்பவம் குறித்து தற்போது சமூக வலைதளங்களில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இது குறித்து கருத்து வெளியிட்ட உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்

இது போன்ற ஒன்றைச் சம்பவமே நமக்குத் தெரியும். வெந்நீரோ, குளிர்ந்த நீரோ, இப்படி ஒரு கிளாஸ் தண்ணீருக்குக் கட்டணம் வவசூலிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. இது மிகப் பெரிய அநீதி.. இது போன்ற செயல்கள் இனி நடக்காமல் தடுக்கும் வகையில் உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது குறித்து கவலை கொள்கிறோம், அத்துடன், நுகர்வோர் அதிகாரசபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிளாஸ் தண்ணீருக்கு பணம் வசூலிக்க நுகர்வோர் சட்டத்தில் இடமில்லை. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ உணவகம் ஒன்றிலேயே இவ்வாறு கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் சுடு நீருக்கு இவ்வளவு விலையை வசூலிக்க நேரிடுகிறது



| | | |
|---|---|---|
| ULUNTHU VADAI | | |
| 200.00 | x12 | 2,400.00 |
| Hot Water | | |
| 100.00 | x12 | 1,200.00 |
| Milk Tea | | |
| 200.00 | x1 | 200.00 |
| Nescafe | | |
| 300.00 | x1 | 300.00 |
| Masala Tea | | |
| 300.00 | x8 | 2,400.00 |

என சமூக வலைதளங்களில் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். LAVIN'S உயர்தர சைவ உணவகத்தின் உரிமையாளர் திரு கஜேந்திரன் அவர்கள் இது விடயமாக தெரிவிக்கையில் தங்கள் menuவில் அது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மிகுந்த செலவில் நவீன machinery மூலம் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு வருவதனால் விலை அறவிடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தமது கிளை நிறுவனம் நல்லூர் கந்தன் கோவிலுக்கு முன்பாகவும் அமைந்துள்ளது. தமிழ் நாடு தொழிலாளர்கள் உட்பட 40 பேருக்குமேல் இங்கு பணி புரிகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# தமிழர் இராஜதந்திரம்

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திற்கான நினைவு நிகழ்வொன்று கிளிநொச்சியில் இடம் பெற்றிருக்கின்றது. பாலசிங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சர்வ தேச முகமாக இருந்தவர். சர்வதேச அரசியல் சூழல் தொடர்பிலும் அதில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பிலும் – குறிப்பாக இந்தியாவின் தலையிடும் ஆற்றல் தொடர்பிலும் பாலசிங்கத்திடம் தெளிவான பார்வை இருந்தது. அவரது இறுதிக்கால நகர்வுகள் அதற்கான ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் பாலசிங்கத்தின் ,ராஜதந்திர நகர்வுகள் வெற்றியளிக்கவில்லை.

இராஜதந்திரம் என்பது தொடங்கிய இடத்திற்கே மீண்டும் திரும்பிச் செல்வதல்ல என்பது பாலசிங்கத்தின் கூற்று ஆனால், இன்று தமிழ் தேசிய அரசியல் எந்த இடத்தில் வந்து நிற்கின்றது?

சமஷ்டிக் கோரிக்கையில் தொடங்கிய தமிழ் தேசிய அரசியல் பயணமானது பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையாக முகம் காட்டியது. இந்த இரண்டு அரசில் போக்கிற்கும் தலைமை தாங்கியவர்கள் மிதவாத அரசியல்வாதிகள். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தனது ஆற்றலின் மீதான நம்பிக்கையிலிருந்து இவ்வாறான கோரிக்கைகளை முன் வைக்கவில்லை. மாறாக சில நெருக்குவாரங்களை கொடுத்தால், சிங்களவர்கள் இறங்கி வருவார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தார்.

தனதும் தனது கட்சியின் மீதான நம்பிக்கையிலிருந்து தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி செல்வநாயகம் செல்லவில்லை. செல்வநாயகத்திற்கு பின்னர் அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நிலைமைகளை துல்லியமாக விளங்கிக் கொண்ட ஒரு தலைவராக இருந்தார். அமிர்தலிங்கத்தை பொறுத்தவரையில், ஈழத் தமிழ் சமூகமானது ஒரு பாரிய யுத்தத்திற்குள் சென்றால் அதன் பின்னர் மீண்டு எழுவதற்கு குறைந்தது 50 வருடங்களாவது செல்லும். புலம்பெயர்ந்த மக்களுடனான சந்திப்பு ஒன்றின் போது அமிர் இதனை குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில் தான், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஒரு பொன் முட்டையிடும் வாத்தாக அமிர் கருதினார். இந்திய படைகள் இலங்கையில் நிலைகொண்டிருப்பது மட்டும் தான், ஈழத் தமிழர்களுக்கு சாதகமானது என்று அமிர் கருதினார். ஆனால் விடுதலைப் புலிகள் வேறு விதமாக யோசித்தனர்.

அப்போது விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக பாலசிங்கமே இருந்தார். பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வில், நோர்வேயின் சமாதான தூதுவர் – எரிக்சொல்ஹெய்மும் பேசியிருந்தார். அப்போது அவர் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். சமாதான ஒப்பந்தத்தின்போ, தான் பலருடன் பழகியிருக்கின்றேன். அவர்களில் சிலர் மட்டுமே உண்மைகளை பேசியவர்கள். அதில் பாலசிங்கமும்ஒருவர்.

பாலசிங்கம் இந்தியாவின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டிருந்தார் ஆனால், பிரபாகரனின் சிந்தனை யோட்டத்தையும் அவர் சமப்படுத்திக் கொண்டு செல்ல முற்பட்டார். ஒரு கட்டத்தில் அது முடியாமல் போனது. தனது சொந்த அமைப்பை உலக யதார்த் தங்களுக்குள்ளால் நகர்த்திச் சென்று, தமிழ் மக்களுக்கு உச்சபட்டசமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் இராஜந்திர முயற்சியில் பாலசிங்கம் வெற்றி பெறவில்லை. அந்த வகையில் அவர் ஒரு தோல்வியடைந்த இராஜதந்திரியாவார். பாலசிங்கத்தின் இராஜதந்திர தோல்விதான்,

இன்று தமிழரின் அரசியலை தொடங்கிய இடத்திற்கே கொண்டு வந்திருக்கின்றது. யுத்தத்திற்கு பின்னரான அரசியலில் இராஜதந்திர நகர்வு என்று குறிப்பிடுமளவிற்கு ஒன்றுமில்லை. சம்பந்தன் அவ்வப்போது இராஜதந்திரம் என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டார். சம்பந்தனின் இராஜதந்திர உதவியாளராக அடையாளப்படுத்தப்பட்டவர் தான் எம்.ஏ.சுமத்திரன்.

ஒரு தரப்பு பலமான நிலையில் இருக்கின்ற போது தான், அங்கு இராஜதந்திரம் சாத்தியப்படும். ஈழத் தமிழர்கள் பலமான நிலையில் இருந்த காலம் என்பது, ஆயுதப் போராட்ட காலம் மட்டும் தான். விடுதலைப் புலிகள் இந்தியாவை நேரடியாக விரோதித்துக் கொண்ட பின்னர் புலிகளுக்கான இராஜதந்திர கதவுகள் பெருமளவிற்கு மூடப்பட்டு விட்டது.

எரிக் சொல் ஹெய்ம் ஒரு விடயத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார் அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவைப் புரிந்து கொள்ளவில்லை அதுத ான் அவர்களின் தவறு. இந்தத் தவறில் பாலசிங்கத்துக்கும் பெரிய பொறுப்புண்டு. எனினும் பாலசிங்கம் இந்தியாவை நோக்கிச் செல்வதற்கு இறுதிக் காலத்தில் சில முற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவருக்கு ஒரு விடயம் தெளிவாக தெரிந்திருந்தது அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பு உலகிலிருந்து (22ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச இராஜதந்திரிகளின் வடக்கு விஜயம்:- ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பை முடிவுக்கு கொண்டு வரலாம்?



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் வழங்குகின்ற அங்கீகாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்திறன்மிக்க கண்காணிப்பை முடிவுக்குக் கொண்டு வரும் எனவும் அது நல்லிணக்க செயன் முறையில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ட் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சாண்டில் ஷால்க் ஆகியோர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வடமாகாணத்துக்குச் சென்றிருப்பதுடன் அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக அம் மூன்று இராஜதந்திரிகளுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளில் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான முயற்சி குறித்து கலந்துரையாடப்பட்டது. நாடளாவிய ரீதியில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு சுவிட்ஸர்லாந்து, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னின்று நிதி, ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சார்ந்த ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகத் தகவல்கள் வெளியாகி, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கும் பின்னணியிலேயே இவ் விஜயம் இடம் பெற்றுள்ளது.

அதன்படி இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (டுவிட்டர்) பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ட், இவ்விஜயத்தின் போது வடக்கில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் குறிப்பாக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் பற்றி பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடியதாக அதில் குறிப்பிட்டுள்ளார். அதனை மேற்கோள் காட்டி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கும் நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன், 'இலங்கை தொடர்பான ஜெனிவா பொறிமுறை செயலிழக்கின்றதா? எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றார். அது மாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் வழங்குகின்ற அங்கீகாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் துடிப்பான (செயற்திறன் மிக்க) கண்காணிப்பை முடிவுக்குக் கொண்டு வரும் எனவும் அலன் கீனன் எச்சரித்துள்ளார். அத்தோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பின்றி நல்லிணக்கத்தை அடைந்து கொள்வதை முன்னிறுத்திய நகர்வுகளின் முன்னேற்றம் மந்தகரமானதாகவே காணப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# அமெரிக்காவின் அதிபராவதற்கு எனது மதம் தடையல்ல! இந்திய வம்சாவழி விவேக் ராமசாமி கொடுத்த பதிலடி!



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் இந்திய வம்சாவளியான விவேக் ராமசாமி தொடர்பில் எழுந்த சர்ச்சைகளுக்கு அவர் பதிலடி கொடுத்துள்ளார். ஒரு இந்து எப்படி அமெரிக்க அதிபராக முடியும் என்று அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

நான் ஒரு இந்து. நான் என் அடையாளத்தை போலியாக காட்ட மாட்டேன். இந்து மதமும், கிறிஸ்தவமும் பொதுவான ஒரே மதிப்பைப் பகிர்ந்து கொள்கின்றன. எனது மத நம்பிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு நபரும் ஒரு காரணத்திற்காக இங்கே இருக்கிறார்கள். அந்த காரணத்தை நிறைவேற்றுவது நமது தார்மீகக் கடமை என்றும் நான் நம்புகிறேன்.

ஏனென்றால் கடவுள் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாழ்கிறார். கடவுள் நம் மூலம் பல்வேறு வழிகளில் செயல்பட்டாலும், நாம் அனைவரும் சமம். இந்த நாட்டில் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு நான் சிறந்த அதிபராக இருப்பேனா? என்றால் இல்லை. அதற்கு நான் சரியான தேர்வாக இருக்க மாட்டேன். ஆனால் எந்த மதிப்புகளின் மீது அமெரிக்க நாடு நிறுவப்பட்டதோ, அவற்றின் பக்கம் நான் நிற்பேன்.

கடவுள் எங்களை ஒரு நோக்கத்திற்காக இங்கு சேர்த்தார் என்று நான் நம்புகிறேன். எனது நம்பிக்கை தான் என்னை அதிபர் பதவிக்கு போட்டியிட இந்த பயணத்தில் வழிநடத்துகிறது என்றார். மேலும் நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தனது மதம் ஒரு தடையாக இருக்காது என்று அமெரிக்கர்களுக்கு தொடர்ந்து உறுதியளித்தார்.

எனது வளர்ப்பு மிகவும் வழக்கமானது. திருமணங்கள் புனிதமானவை என்றும் குடும்பங்கள் சமுதாயத்தின் அடித்தளம் என்றும் எனது பெற்றோர்கள் எனக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள். திருமணத்துக்கு முன்பாக மதுப்பழக்கத்தை விட்டு விடுவது சாத்தியமானது. தகாத உறவு தவறானது. வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த மதிப்பீடுகள் மிகவும் முக்கியம் அல்லவா?

அமெரிக்காவின் மூலமாக கிறிஸ்தவத்தைப் பரப்ப நான் சிறந்த ஜனாதிபதியாக இருப்பேனா என்று கேட்டால், நிச்சயம் இருக்க மாட்டேன். அதற்கு நான் சரியான தெரிவு அல்ல. ஆனால், அமெரிக்கா நிறுவியுள்ள மதிப்பீடுகளை பேணிக்காக்க நான் உறுதியாக நிற்பேன் என்று தெரிவித்துள்ளார்.

38 வயதாகும் விவேக் ராமசாமி, தென்மேற்கு ஓஹியோவைச் சேர்ந்தவர். இவரது தந்தையும், தாயும் கேரளாவில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறியவர்கள் என்பதும், விவேக் ராமசாமி தனக்கு தமிழ்தெரியும் என்று கூறியிருக்கின்றார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் இந்திய வம்சாவளியான விவேக் ராமசாமிக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்த தரப்பு பதுக்கிய பணத்தை மீட்டாலே வரி வசூலிக்கத் தேவையில்லை - சந்திரிகா



இலங்கையில் ராஜபக்ச குடும்பத்தினர் திருடிய பணத்தை திரும்பப் பெற்றால் பொதுமக்களிடம் வரி வசூ லிக்க வேண்டிய அவசியம் இருக்காது என முன்னாள் அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினருக்கு வரி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு முன், ராஜபக்ச குடும்பத்திடமிருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறும் அரசாங்கத்திற்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் குறைந்த வரி வீதத்தை சுட்டிக்காட்டிய அவர், வரிகளை அதிகரிப்பதற்கு பதிலாக இழந்த நிதியை மீட்பதில் கவனம் செலுத்துமாறு பரிந்துரைத்தார். கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த அவர், ஜனவரி மாதம் முதல் வரி அதிகரிப்பினால் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட உள்ளதாகவும், நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் மீது வரி விதிக்கப்படக்கூடாது என்றும் தெரிவித்தார். ராஜபக்ச குடுப்பத்தினர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பதுக்கி வைத்துள்ள நிதியை மீட்பதே இதற்கான தீர்வாக அமையும் என்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.




# இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பில்!

உலக நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன. பலம் பொருந்திய நாடுகளின் உள்நாட்டு அரசியல் தீர்மானங்களில் புவிசார் அரசியல் போட்டிகளும் நாடுகளுக்கு இடையிலான எல்லை பிரச்னைகளும் பெருமளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றன. இந்தியா ஒரு பிராந்திய சக்தி. உலகில் மிகவும் செல்வாக்குமிக்க நாடு. குளோபல் சவுத்தின் முகம். சீனாவின் விரிவாக்கக்கொள்கையும் பாகிஸ்தானின் தீவிரவாத தலையீடுகளும் இந்தியாவின் அயலுறவு கொள்கையில் பெரியளவில் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் இந்தியாவின் ஆளும் பா. ஜ. க. அரசாங்கமானது ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கான அரசியலமைப்பின் விசேட அந்தஸ்தை இரத்து செய்யும் சட்டமூலத்தை 2019,ல் நிறைவேற்றியது.

இந்திய அரசியலமைப்பின் 370ஆவது பிரிவு ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விசேட அந்தஸ்தை வழங்கியிருந்தது. 1949,ல் நேரு தலைமையிலான காங்கிரஸ் நிர்வாகம் இந்த விசேட அந்தஸ்தை வழங்கியிருந்தது. இதன் மூலம் இந்தப் பகுதி சுய ஆட்சிக்கான தகுதியைப் பெற்றிருந்தது.

இதற்கென சொந்த அரசியல் யாப்பு மற்றும் சுயாதீனமான கொடியையும் கொண்டிருந்தது. அனைத்து விடயங்களிலும் சுயாதீனமான அரசியல் தீர்மானங்களுக்கான உரிமையை பெற்றிருந்தது. அந்தத் தகுதிநிலையையே பா. ஜ. க. அரசாங்கம் 2019,ல் நீக்கியது. இது சமஷ்டி கோட்பாட்டை பலவீனப்படுத்துவதாகக் கூறி இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் தான் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் சரியானது என்று இந்திய உச்ச நீதிமன்மன்றம் தற்போது தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

இதிலிருந்து ஈழத் தமிழர்கள் எதைக் கற்றுக் கொள்ள முடியும்? 2022இல் ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த முயற்சியை கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ரெலோவே முன்னெடுத்திருந்தது. எனினும், பின்னர் இரா. சம்பந்தன் குறித்த கடிதத்தில் சமஷ்டியை வலியுறுத்தினால் தான், தான் கையெழுத்திடுவேன் என்று கூறி அடம் பிடித்தார். பின்னர் கடிதத்தில் சமஷ்டியும் உள்வாங்கப்பட்டது.

அதன் பின்னர் இரண்டாவது கடிதமொன்றும் அனுப்பப்பட்டது. ஆனால் மூன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13ஆவதுதிருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமையை நிராகரித்து, சமஷ்டி தீர்வை பெற்றுத் தருவதற்காக பிரதமர் மோடி தலையீடு செய்ய வேண்டுமென்று கோரியிருந்தார். அதனைத் தொடர்ந்து சம்பந்தனும் அவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியிருந்தார்.

இலங்கைத்தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையான ஈழத் தமிழ்மக்களுக்கு சமஷ்டி அரசாங்கமொன்றை வழங்குமாறு இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. இந்த விடயத்தை தெளிவாக புரிந்திருந்தால், அவ்வாறான கடிதங்களை பிரதமர் மோடிக்கு அனுப்ப வேண்டிய தேவை இருந்திருக்காது. கஜேத்திரகுமாரின் உள்நோக்கம் மிகவும் தெளிவானது

அதாவது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தத்தை முற்றிலுமாக இல்லாமல் ஆக்குவது. தமிழ் அரசியல் கட்சிகளின் பலவீனத்தை தெளிவான புரிந்து கொண்டதன் பின்புலத்தில் தான் மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் 13ஆவதுதிருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் தலையீடு செய்யுமாறு கோரி இந்திய பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

இந்தியாவிடம் எதைக் கோர வேண்டுமோ அதனையே கோர வேண்டும். அது தான் சரியானது. அவ்வாறில்லாது இந்தியாவின் இலங்கை தொடர்பான கொள்கை நிலைப்பாட்டுக்கு புறம்பான விடயங்களை கோருவதால் ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா நேரடியாக தலையிடுவதில் அவை சிக்கல்களையே ஏற்படுத்தும். அது மேலும் ஈழத் தமிழர்களையே பாதிக்கும். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு விடயத்தை உறுதியாக கூறிச் சென்றிருந்தார். 13ஆவது திருத்தச் சட்டவிடயத்தில் இந்தியா உங்களோடு நிற்கும்.

# நல்லிணக்க முயற்சி சகல தரப்பினரது ஆதரவுடன் அரசியல் தீர்வு முயற்சியாகவும் மாற வேண்டும் - அமெரிக்கத் தூதர்

இலங்கையில் அரசியல் தீர்வு எதுவாக இருந்தாலும் அது உண்மையில் எல்லாத் தரப்பினரதும் நல்லிணக்க முயற்சியாக அமைய வேண்டும். இது சாத்தியமானது என்றே நான் நினைக்கின்றேன். ஆனால், இதில் கடின உழைப்பு அவசியமாகிறது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

கொழும்பு தமிழ் வார வெளியீட்டுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடிய அமெரிக்கத் தூதுவர், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பாதிக்கப்பட்ட மக்களை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும் புலம்பெயர் மக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர், புலம்பெயர் மக்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு நம்பிக்கை வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.



கேள்வி: உலகளாவிய தமிழர் மன்றம் இலங்கைக்கு தற்போது வந்து சந்திப்புகளில் ஈடுபட்டுள்ளது. மேலும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் உள்ள இலங்கை புலம்பெயர் மக்களுக்கு உங்கள் செய்தி என்ன?

பதில்: பல இலங்கை அமெரிக்க வணிக மக்கள் இலங்கைக்கு திரும்பி வந்து முதலீடு செய்ய விரும்புகிறார்கள். இருப்பினும், அவர்களின் பணம், அவர்களின் முதலீடு, பணம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது அவசியமாகும். ஊழல்கள் இடம் பெறக் கூடாது. அவர்கள் தேடுவது அவர்களின் முதலீட்டுக்கும் நல்லாட்சிக்குமான உத்தரவாதங்களாகும். அதனால் தான், புலம்பெயர் மக்களுக்கு நம்பிக்கையை வழங்க அரசாங்கத்தை ஊக்குவிக்கிறோம். இதன் மூலம் அமெரிக்காவிலுள்ள அதிக இலங்கையர்களை திரும்பி வர ஊக்குவிக்க முடியும்.

அநேக புலம்பெயர் சமூகங்கள் திரும்பி வந்து இணைப்புகளையும் பாலங்களையும் உருவாக்க விரும்புகின்றன என்று நான் நினைக்கிறேன். எனவே வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுக்கான புதிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். அமெரிக்காவில் மட்டுமல்ல கனடா அவுஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் வேறு இடங்களிலுள்ள இலங்கையர்கள் இலங்கையுடன் மீண்டும் இணைவதற்கு உதவுவதாக அமையும்.

கேள்வி: இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் நீண்ட காலமாக அரசியல் தீர்வை கோரி வருகின்றனர். நீங்கள் அடிக்கடி தமிழ் தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்துகிறீர்கள். தீர்வுத் திட்டம் குறித்து அவர்கள் என்ன கூறுகின்றனர்? அரசியல் தீர்வு குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: இந்த விடயத்தில் அனைத்து இலங்கையர்களின் குரல்களையும் நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் நாம் கேட்பது மிகவும் முக்கியம். அதனால் தான் வெவ்வேறு மாகாணங்களுக்குச் சென்று மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள முயற்சிக்கிறேன். ஆகவே அவர்களின் கருத்துக்களைக் கேட்கும் போது இவை அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல, மக்களுக்கு மிகவும் மாறுபட்ட பார்வைகள் உள்ளனவா?, இல்லையா? என்பதை புரிந்து கொள்ள முடியும்.

எவ்வாறு முன்னேறுவது என்பது குறித்து மக்கள் வெவ்வேறு தீர்வுகள் மற்றும் வெவ் வேறு யோசனைகளைக் கொண்டுள்ளனர். ஆனால் அவர்களின் குரலைக் கேட்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் குடிமக்களின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறார்கள். மற்றும் இந்த நாட்டின் எதிர்காலத்தை முடிவெடுக்கும் செயல்முறையில் பங்கெடுக்க விரும்புகிறார்கள்.

அவர்கள் எண்ணிக்கையில் சிறியதாக இருக்கலாம். ஆனால், அவர்களின் உரிமைகள் கேட்கப்படுவதையும் உரிமைகள் செயற்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்த விரும்புகிறார்கள். இந்த விவாதங்கள் மற்றும் கரிசனைகள் ஆகியவற்றிலிருந்து வருகின்ற அரசியல் தீர்வு எதுவாக இருந்தாலும், அது உண்மையில் எல்லாத் தரப்பினரதும் ஓர் உண்மையான நல்லிணக்க முயற்சியாக இருக்க வேண்டும். அதனால் தான் நான் பயணம் செய்யும் போது பல்வேறு தமிழ் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக குழுக்களைச் சந்திக்கும் போது இது பற்றிப் பேசுகிறேன். எதுவும் சாத்தியம் என்று நினைக்கிறேன். நான் ஒரு போதும் அவ நம்பிக்கையானவர் அல்ல. இதில் கடின உழைப்பு தேவையென்று நான் நம்புகிறேன்.

கேள்வி : பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் குறித்துப் பேசுகின்றீர்கள். இலங்கை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்கவுள்ளது. இது தொடர்பில்?

பதில்: நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும் இவ்வளவு நீண்ட காலமாக இடம் பெறுகின்றன. நாடு முழுவதுமுள்ள பலருடனான எனது பயணங்களிலிருந்து, மக்கள் பதில்களுக்காகக் காத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக காணாமல் போனவர்களின் தாய்மார்கள் அல்லது சகோதரர்கள் அல்லது சகோதரிகளைக் குறிப்பிடலாம்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பதில்களுக்காக இன்னும் பலர் காத்திருப்பதைப் பற்றி கேட்பது சிரமமாக இருக்கிறது. காணாமல் போனவர்களின் அலுவலக செயற்பாட்டில் சில வரையறுக்கப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அந்த அலுவலகத்தினால் மேலும் பலவற்றைச் செய்ய முடியும் என்று நினைக்கிறேன். அனைத்து இலங்கையர்களுக்கும் வலுவான எதிர்காலத்தை உருவாக்க கடந்த காலத்தை நிவர்த்தி செய்வது முக்கியமாகும். இந்தத் தேவைகள் மற்றும் குடிமக்கள் அனைவரின் இந்தக் கவலைகள் குறித்து அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்துவது முக்கியம்.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க வழி முறை, முன்மொழிவு பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இது குறித்து சிவில் சமூகத்திலிருந்து சில கரிசனைகளையும் கருத்துகளையும் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். வெறுமனே மற்றுமொரு ஆணைக்குழுவை மக்கள் விரும்பவில்லையென்று நான் நினைக்கிறேன். உண்மையான உறுதியான முடிவுகள் மற்றும் முயற்சிகள் இருக்கும் என்பதைக் காண்பிப்பதே மக்களுக்கு அவசியமாகும். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான இந்த முயற்சிகளைத் தொடரும் போது மனித உரிமைகள் குறித்து நில உரிமைகள் தொடர்பான சில நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் அவசியமாகும். எனவே இந்த விடயத்தில் அனைத்து பங்குதாரர்களும் ஆலோசிக்கப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அனைத்து சிறுபான்மை சமூகங்களுடனும் ஆலோசிக்கப்பட வேண்டும். இந்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பாதிக்கப்பட்டமக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதனை எப்போதும் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

# அமெரிக்கத் தூதுவருக்கு மிக விருப்பமான உணவாக யாழ்ப்பாணக் கூழ், நண்டுக்கறி, இடியப்பம், மோதகம்

எனக்கு இலங்கை உணவுகள் பிடிக்கும். குறிப்பாக காரமான உணவை விரும்புகிறேன்.ஏனென்றால் நான் கொரியாவில் பிறந்தேன், காரமான உணவுடன் வளர்ந்தேன். குறிப்பாக யாழ்ப்பாணம் செல்லும் போது யாழ்ப்பாண நண்டுக் கறி மற்றும் யாழ்ப்பாண மிளகாய் எனக்கு மிகவும் பிடிக்கும். மேலும் யாழ்ப்பாணக் கூழ் எனக்குப் பிடிக்கும். ஒருமுறை யாழில் நான் கூழ் குடித்துக் கொண்டிருந்த போது, உணவகத்தில் இருந்த பெண்மணி, இது காரமாக இருக்குமே என்று கூறினார். ஆனால் நான் அதை மிகவும் விரும்பி அருந்தி னேன்.

எனக்கு மோதகமும் பிடிக்கும். அது வடக்கில் நான் சாப்பிட்ட மற்றொரு பிடித்த உணவு. அது ஒரு கொரிய உணவைப் போலவே இருக்கும். அத்துடன் இடியப்பமும் எனக்குப் பிடிக்கும். இலங்கை தேநீரை விரும்பி அருந்துவேன். சில தேயிலைத் தோட்டங்களையும் பார்வையிட்டேன். சுவையான தேநீரை நான் மிகவும் ரசிக்கிறேன். அது இலங்கையின் பெருமை என்ற அவர் இலங்கையில் மறக்க முடியாத நிகழ்வாக

எனக்கு மறக்க முடியாத அனுபவங்கள் நிறைய உள்ளன. ஆனால் அமெரிக்க செனட்டர் கிறிஸ் வான் ஹோலன் இலங்கை, அமெரிக்க இராஜதந்திர உறவின் 75ஆவது ஆண்டு நிறைவின் போது இலங்கைக்கு விஜயம் செய்தார். என்னைப் பொறுத்தவரை அது மிகவும் மறக்க முடியாத நிகழ்வு. காரணம் அவரது தந்தை 50 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு அமெரிக்கத் தூதுவராக இருந்தார்.

தூதுவரின் மகன் தான் சிறு வயதில் வாழ்ந்த தூதுவரின் வசிப்பிடத்துக்குத் திரும்பி வந்தமை, மீண்டும் தனது பழைய வீட்டைப் பார்த்தமை 50 ஆண்டுகளுக்கு முன்பு இங்கே ஒரு குழந்தையாக இருந்ததைப் பற்றிப் பேசியமை மறக்க முடியாதது. நாங்கள் கண்டிக்கும் சென்றோம். நான் இதுவரை மறக்க முடியாத தருணங்களில் அதுவும் ஒன்றாகும் என்றார்.



# கனேடிய தமிழ் காங்கிரஸ் மகிந்தாவுடன் சந்திப்பு!

## நம்ப முடியாத துரோகம் என கனடா தமிழ்ச் சமூகத்தின் கொந்தளிப்பு!

கனேடிய தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டுள்ளமை குறித்து கனடா தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்கள் கடும் ஏமாற்றமும் சீற்றமும் வெளியிட்டுள்ளனர் இது குறித்து தமிழ் கார்டியன் தெரிவித்துள்ளதாவது.

பல வருடங்களாக கனேடிய தமிழ் காங்கிரஸ் பாரிய அநீதிகளிற்காக இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டும் சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை அவசியம் என வேண்டுகோள் விடுத்து வந்திருந்தது. கடந்த வாரம் அவர்கள் தமிழர்களிற்கு எதிரான அநீதிகளிற்கு முக்கியகாரணமான நபரை சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இது கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தினருக்கு கடும் அதிருப்தியையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாட்களாக இடம் பெற்ற சம்பவங்கள் பலருக்கு சீற்றத்தையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது என தெரிவித்துள்ளார் அபிமன்யு சிங்கம் இவர் கனேடிய தமிழ் காங்கிரசினை ஸ்தாபித்தவர்களில் ஒருவர் அதன் முன்னாள் இயக்குநர்

கடந்த காலங்களில் சிடிசி ஏனைய பல தமிழ் புலம்பெயர் அமைப்புகளைபோல 2009 இல் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழர்களிற்கு நீதி பொறுப்புக் கூறலிற்காக குரல்கொடுத்து வந்துள்ளது.

ஒட்டாவா ரொன்டோ வோசிங்டன் மற்றும் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றில் அவர்கள் பரப்புரையில் ஈடுபட்டனர். எனினும் கனேடிய தமிழ் காங்கிரசின் கடந்த வார சந்திப்பும் பல கனேடிய தமிழர்களிற்கு அதன் ஸ்தாபக தலைவர் அபிமன்யு சிங்கத்திற்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

கொழும்பில் கனேடி தமிழ் காங்கிரசின் சிரேஸ்ட தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்தனர் - சிடிசி முன்னர் நீதிகோரிய அநீதிகளிற்கான முக்கிய காரணகர்த்தா மகிந்த ராஜபக்ச. அவரது ஆட்சியின் கீழேயே படையினர் முள்ளிவாய்க்கால் மருத்துவமனைகள் மீது எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் வெள்ளை கொடியுடன் சரணடைய வந்த தமிழர்களை சுட்டுக்கொன்றனர்.

கடந்த வாரம் ராஜபக்ச தனது அலுவலகத்தில் தனது பணியாளர்களுடன் பெரிய தேசிய கொடியின் கீழ் அமர்ந்திருந்தார். அந்த கட்டிடம் முழுவதும் முன்னாள் ஜனாதிபதியின் படங்கள் காணப்பட்டன- சிடிசி உறுப்பினர்கள் சுமூகமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள் கை குலுக்கினார்கள் ஒன்றாக படம் எடுத்துக்கொண்டார்கள்.

அந்த படங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தின. ஒரு சில நிமிடங்களில் அவை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன - கனேடிய தமிழர்களின் கடும் கண்டனத்திற்குள்ளாகின.

உலக தமிழர் பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரசும் சமீபத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து பேசியுள்ளமை கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்கின்றார் கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி.

ராஜபக்சாக்களின் குற்றங்கள் நன்கு பதியப்பட்டுள்ளன 2023 ஜனவரி 10 ம் திகதி கனடா அரசாங்கம் மனித உரிமைகளை திட்டமிட்ட முறையில் மீறியமைக்காக மகிந்த ராஜபக்ச கோட்டாபய ராஜபக்சாவிற்கு எதிராக தடைகளை விதித்தது. என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை பேரவையிலும் ஏனைய அமைப்புகளிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பரப்புரையின் பின்னரேஇது சாத்தியமானது யுத்த குற்றம் மனித குலத்திற்கு எதிரான



குற்றங்கள் தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் என்பவற்றிற்கு நீதிகோரி பரப்புரை இடம் பெற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக தடைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் கனடா பிரஜைகள் உட்பட சிடிசியின் உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவை சந்தித்துள்ளனர்

உலக தமிழர் பேரவையின் அழைப்பின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம் பெற்றதாக ராஜபக்ச அலுவலகம் தமிழ் கார்டியனிற்கு உறுதி செய்துள்ளது. உலக தமிழர் பேரவை என்பது சிடிசி நோர்வேஜியன் தமிழ் போரம் ஆகியவற்றை உள்ளடக்கிய அமைப்பு

பாதிக்கப்பட்டவர்கள் சிவில் சமூகத்தினர் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுடன் கலந்தாலோசிக்காமல் மகிந்த ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டமை மதிப்பிடலில் ஏற்பட்ட பெரும் தோல்வி என ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடுகள் இந்த அமைப்புகளின் நம்பிக்கையை அவர்கள் தாங்கள் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் தாயகத்தில் உள்ள தமிழர்களின் சார்பில் பரப்புரை செய்வதற்கானவர்கள் என தெரிவிக்கப்படுவதை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் மக்களின் இரத்தத்திலும் வியர்வையிலும் கட்டியெழுப்பப்பட்ட அமைப்பு எங்கள் முதுகில் குத்திவிட்டது என்பது குறித்து நான் ஏமாற்றமும் விரக்தியும் காயமும் அடைந்துள்ளேன் என தமிழ் கனடா சமூகத்தின் தீவிர செயற்பாட்டாளர் நீதன் சான் தெரிவித்துள்ளார்.

யுத்த குற்றவாளிகள் தமிழ் மக்களின் இனப் படுகொலையாளிகளுடன் இணைந்து செயற்படுவதற்காக நாங்கள் ஒரு சமூகமாக இணைந்து இவர்களை கண்டிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கருத்தினை கனடாவின் குயின்ஸ் பல்கலைகழகத்தின் கனடா தமிழரான பேராசிரியர் அமர்நாத் அமரசிங்கம் உட்பட பலரும் முன் வைத்துள்ளனர்.

இது குறித்து என்னுடன் பேசிய அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர் என தெரிவித்துள்ள அவர் ஐக்கியநாடுகளில் பல வருடங்களாக மகிந்தவின் யுத்த குற்றங்கள் குறித்து உரையாற்றிய அதனை இனப்படுகொலை என அங்கீகரிக்க வேண்டும் என பரப்புரை செய்த கனேடிய தமிழ் காங்கிரசும் உலக தமிழர் பேரவையும் தற்போது அவரின் பின்னால் சென்றுள்ளமை குறித்து மிகவேகமாக தெளிவான விளக்கங்களை முன்வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு அபிவிருத்திகள் என வரும்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது தவிர்க்க முடியாதது என நான் கருதுகின்றேன் ஆனால் சிறிதளவேனும் வருந்தாத பூஜ்ஜிய பொறுப்புக்கூறலை வெளிப்படுத்திய புலம்பெயர்ந்த தமிழர்களின் பூ தாகரமாக சித்தரிக்கும் அரச தலைவர்களுடன் இணைந்து செயற்படுவது தீங்கு விளைவிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

கனேடிய தமிழ் காங்கிரஸினை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கியவர் என்ற அடிப்படையில் அந்த அமைப்பு அதன் ஆணை மற்றும் தொலைநோக்கு பார்வையிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளது என்பது கவலையளிக்கின்றது என சட்டத்தரணி ஹரிணி சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

# உலகத்தமிழர் பேரவையும் கனடிய தமிழ்க்காங்கிரசும் மகிந்தாவைச் சந்தித்தமைக்கு ஹரி கடும் அதிருப்தி



உலகத் தமிழர் பேரவையும், கனடிய தமிழ்க் காங்கிரஸஜீம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அண்மையில் சந்தித்ததையிட்டு நான் கடும் அதிருப்தி கொண்டுள்ளேன் என்று கனடிய சுதேச உறவுகளின் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பாரிய அளவானதும், கட்டமைக்கப்பட்டதுமான மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆந் திகதி கனேடிய அரசு தடைகளை விதித்தது.

தமிழர்களுக்கு எதிராகப் புரியப்பட்ட போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு பொறுப்புக் கூறலை வலியுறுத்திப் பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், ஏனைய சர்வதேச அரங்குகளிலும் குரல் எழுப்பப்பட்ட பின்னரே இது நடைபெற்றது.

தப்பிப்பிழைத்தவர்கள், குடிசார் சமூக அமைப்புகள், இலங்கையில் உள்ள தமிழர்கள் ஆகியோரைக் கலந்தாலோசிக்காது மேற் கொள்ளப்படும் இந்த முயற்சி முடிவெடுப்பதில் ஏற்பட்ட பாரதூரமான தவறாகும். இந்த நடவடிக்கைகள், இந்த அமைப்புகள் மீதும், புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும், மிக முக்கியமாகத் தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படுவதாகவும் இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளன.

இலங்கைத் தீவில் உள்ள தமிழர்கள், பொறுப்புக்கூறலுக்குத் தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கும் பலமானதும், சக்தி வாய்ந்ததுமான குரலைக் கொண்டுள்ளார்கள். அவர்களின் குரலாக இந்த அமைப்புகளின் நிலைப்பாடுகள் அமையவில்லை. இந்த அமைப்புகளின் தலைமைகளை ஆழ்ந்து சிந்திக்குமாறும், அவற்றின் செயல்களுக்குப் பொறுப்புக்கூறுமாறும் நான் கோருகிறேன் என்றுள்ளது.

# 1500 வைத்தியர்கள் இலங்கையை விட்டு வெளியேற்றம்! 40 வைத்தியசாலைகள் மூடல்!

கடந்த 2023ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப் பகுதி வரை 1,500 வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். மேலும் 5,000க்கும் அதிகமானோர் வெளிநாடு செல்வதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் வெளியேற்றம் காரணமாக தற்போது 40க்கும் மேற்பட்ட சிறிய மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை சர்ச்சைக்குரிய தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திர குப்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹியூ மன் இம்யூ னோகுளோபுலின் என்ற மருந்தை இறக்குமதி செய்தமை தொடர்பில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சந்திர குப்த குற்றப் புலனாய்வு திணைக் களத்தில்முன்னிலையாகியிருந்த நிலையில் தற்போது அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


16 டிசம்பர் 2023 முதல் 22 டிசம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை

நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 18 டிசம்பர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 40வது பிறந்த நாள் நினைவாக



### திரு ஈசாந்தன் இராமலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஈசாந்தன் இராமலிங்கம் அவர்களது 40வது பிறந்த நாள் 20 டிசம்பர் 2023 புதன்கிழமை ஆகும். அன்றையதினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது துணைவியார் திருமதி லக்ஷனா ஈசாந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார். திரு ஈசாந்தன் அவர்களது பிறந்த நாளில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி இரத்தினசபாபதி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது 12வது ஆண்டு நினைவு தினம் 21 டிசம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நாள் நினைவு நாள் 22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பிரமணியம் நமசிவாயம்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதி பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் நமசிவாயம் அவர்களது ஏழாவது ஆண்டு நாள் நினைவு நாள் 16 டிசம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத் தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் நமசிவாயம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்

### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2023 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




16 டிசம்பர் 2023 சனிக்கிழமை யாழ்.கன்னாதிட்டி வீதி பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் நமசிவாயம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





14 டிசம்பர் 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி பத்மநாதன் புவனேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி கம்ஷாவின் பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி கம்ஷா தனது பெற்றோர்களுடன் இணைந்து 17 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




18 டிசம்பர் 2023 திங்கட்கிழமை நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




20 டிசம்பர் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜேசுதாசன் அந்தோனிப்பிள்ளை ஜெஸ்மின் இணையர்களது 37வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 டிசம்பர் 2023 புதன்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஈசாந்தன் இராமலிங்கம் அவர்களது 40வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய தினம் அவரது துணைவியார் லக்ஷனா ஈசாந்தன் அவர்கள் துணைவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.




21 டிசம்பர் 2023 வியாழக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசபாபதி நல்லதம்பி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் சுதா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஷர்மி ஸ்ரீதரனின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஷர்மி ஸ்ரீதரன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் சுதா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஷர்மி ஸ்ரீதரனின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஷர்மி ஸ்ரீதரன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் சுதா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஷர்மி ஸ்ரீதரனின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஷர்மி ஸ்ரீதரன் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஐந்தாவது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




21 டிசம்பர் 2023 வியாழக்கிழமை கனமாவில் வசிக்கும் திரு திருமதி சாமினி சுதாகரன் குடும்பத்தினர் சீரடி சாயிபாபா விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




12 டிசம்பர் 2023 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த திரு சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது மூன்றாவது ஆண்டு நாள் நினைவு நாள் 22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்
Association of Past Business Owners of Sri Lanka Canada
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
PRESENTS
11 வது ஆண்டில்
வர்த்தக தீபம் 2023
11TH ANNUAL
Winter Get-Together
AWARDS | DINNER | ENTERTAINMENT
மெகா ரியூநெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னணி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....
DEC 26 2023 TUESDAY 6:00 PM
SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3
Mega Tuners
வல்லவர் தொழில் வர்த்தகத்துறை
வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
நாவிற்கினிய அறுசுவை உணவுகள்
அன்பளிப்பு $60
உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
SOMA SATCHITHANANDAN
President
647.202.3234
SOTHY SELLA
Secretary
647.409.8966
KATHIRAVEL KARUNANANTHAN
Treasurer
416.970.3182


கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்
ஆதரவில்
கவிஞர் பாலரவி
இங்கிலாந்து
அவர்களின்
நூல்கள் வெளியீட்டு விழா
அழைப்பிதழ்
வாழ்த்துக்கள்
காலம்:
24.12.2023
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம்:
110 Ironside Crescent Unit 18,
Scarborough M1X 1M2
இந் நிகழ்வில் கலந்து பங்கேற்று
நிகழ்வைச் சிறப்பிக்குமாறு
உங்கள் அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு:
நூல் வெளியீட்டுக் குழு
647 859 0142 | 647 966 5794 | 647 505 5796


Friends MATRIMONY
உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட வரன்கள் கைவசமிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.
கனடாவில் வசிக்கும் வயது 27. (Single) இந்து Vellaler, Bachelor's Degree வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120390)
கனடாவில் வசிக்கும் வயது 31. (Single) இந்து. வேளாளர். Bachelor's Degree, வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120397)
கனடாவில் வசிக்கும் 25 வயது முதல் 65 வயது வரையான (Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, வரை படித்த மணமகன்களுக்கு (Single / Divorced / Annulled) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.
+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 2259
+1 416 477 6854
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri 11AM to 6PM
Sat 12PM to 6PM
www.friendsmatrimony.com







# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

**ஐயப்பன் மெய்யடியார்களே!**

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**

24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**

01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**

25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**

26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**

01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**

15-01-2024 திங்கட்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**

21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.


- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



# கனடா – அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

**அம்பாள் அடியார்களே!**

## கனடா முத்துமாரியம்மன்
## அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

27 ஜனவரி 2024 சனிக்கிழமை கனடா முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அம்பாள் பக்தர்களின் கவனத்திற்கு!**

31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.00 மணிக்கு புதுவருட விசேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். 01 ஜனவரி 2024 திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பக்தர்களின் வழிபாட்டிற்காக ஆலயம் திறந்திருக்கும். அனைவரும் வருக! அம்பாளின் பேரருள் பெறுக!

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# இமாலயப் பிரகடனம்:- தமிழ்மக்களுக்கு யார் பொறுப்பு?

நோர்வீஜிய மத குருவாகிய அருட் தந்தை.ஸ்டிக் உட்னெம் -குச.ளுவபை Utnem- இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளில் மதத்தலைவர்கள் பங்களிப்புச் செய்யலாம் என்று சிந்திப்பவர். அதற்காக உழைப்பவர். 2014இல் நான் நோர்வேக்குச் சென் றபொழுது அவரைச் சந்தித்தேன். இலங்கையில் திருச்சபைகளின் பங்களிப்போடு இன நல்லிணக்க முயற்சி ஒன்றினை முன்னெடுக்கவிருப்பதாக அவர் என்னிடம் சொன்னார்.

அதற்கு நான் சொன்னேன், நல்ல விஷயம். ஆனால் நல்லிணக்க முயற்சிகளை திருச்சபைகளில் இருந்து தொடங்குவதற்கு பதிலாக விகாரைகளில் இருந்து தொடங்குவது தான் பொருத்தமாக இருக்கும் என்று.ஏனென்றால் யுத்தம் அங்கிருந்து தான் தொடங்குகின்றது.எ னவே அங்கிருந்து தான் சமாதானமும் தொடங்க வேண்டும். மாறாக திருச்சபைகளில் இருந்து அதைத் தொடங்க முற்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்களும் அவர்களுக்குச் சார்பான வெள்ளைக்கார நாடுகளும் கிறிஸ்தவ அமைப்புக்களுக்குடாக தமது யுத்த வெற்றியைத் தட்டிப்பறிக்க பார்க்கின்றனர் என்று சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் வியாக்கியானம் செய்வார்கள் என்று.

கடந்த மாதம் 23-29ஆம் திகதி வரையும் இலங்கையிலிருந்து மதத் தலைவர்களின் குழு ஒன்று நோர்வேக்கு விஜயம் செய்தது. ஒஸ்லோ முருகன் ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி ஒரு மத நல்லிணக்க ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் உரையாற்றிய திருகோணமலை கத்தோலிக்க மறை மாவட்டத்தின் ஆயர் தன்னுடைய மறை மாவட்டத்தில்,சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இரு வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்ற தொனிப்பட கருத்து தெரிவித்துள்ளார். அதாவது திருக்கோணமலையில் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்பில் சட்டம் அப்படித்தான் பிரயோகிக்கப்படுகிறது என்று பொருள்.

மேற்படி மதத் தலைவர்கள் குழுவின் நோர்வேப் பயணத்திற்குரிய ஏற்பாடுகளின் பின்னணியிலும் அருட்தந்தை.ஸ்டிக் உட்னெம் இருந்திருக்கிறார். இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் இப்பொழுது ஏறக்குறைய களைத்துப் போய் விட்டார் என்று அவரைத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்டதோர் மத அரசியல் பின்னணியில் தான் கடந்த வாரம் ஹிமாலய பிரகடனம் என்ற ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஜி.ரி.எஃப் என்று அழைக்கப்படும் உலகத் தமிழர் பேரவையும்,''சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கமும் இணைந்து உருவாக்கியதே மேற்படி இமாலய பிரகடனம் ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்துக்கு ஒரு தொகுதி பிக்குகளை அழைத்துச் சென்ற ஜி.ரி.எஃப்.,அங்கு வைத்து அப்பிரகடனத்தைத் தயாரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட 9 மாதங்களின் பின் அதை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு பௌத்த குருமாரோடு இணைந்து ஒரு தமிழ்த் தரப்பு இவ்வாறு பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருப்பது இதுதான் முதல் தடவை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தனி நாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தாலும், பௌத்த மகா சங்கத்தோடு உரையாடத்தான் வேண்டும்.ச மாதானம் ஆகட்டும், நல்லிணக்கமாகட்டும் எதுவும் பௌத்த விகாரைகளில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலம் முழுவதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் போது அவற்றைத் தடுத்ததில் அல்லது குழப்பியதில் மகா சங்கத்துக்கு முக்கிய பங்கு உண்டு.இலங்கைத் தீவின் பௌத்தம், ஓர் அரச மதம், அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளாக காணப்படும் அரசியல்வாதிகள் படைத் தரப்பு சிங்கள பௌத்த ஊடகங்கள் என்பவற்றோடு பௌத்த மகாசங்கமும் ஒன்று. எனவே மகாசங்கத்தின் ஆசீர்வாதங்களின்றி இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டு காலப்



பகுதிக்குள் தமிழ்த் தரப்பிலிருந்து மகா சங்கங்களை நோக்கிச் சென்றவர்கள் மிகக்குறைவு. விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றதும் மகாநாயக்கர்களைச் சந்திக்கச் சென்றார். அதில் ஒரு பீடம் அவரை மதித்து நடத்தியதாகவும் மற்றொரு பீடம் அவரை மதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. அதன் பின் தமிழ் அரசியற் சமூகத்தில் இருந்து யாரும் மகாநாயக்கர்களோடு உரையாடவில்லை.

அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்குத் திட்டமிட்டு நியமிக்கும் தமிழ் ஆளுநர்கள் மகாநாயக்கர்களிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள். அது போல அண்மையில் கொழும்பில் பெரிய அளவில் முதலீடு செய்வதற்கு வந்த புலம்பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் தன் மனைவியோடு சென்று மகா சங்கத்தினரிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தார் .மேலும் இந்தியாவில் இருந்து வரும் அமைச்சர்களும் தூதுவர்களும் மகா சங்கத்தினரிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணியில், மகா சங்கத்தின் ஆசிர்வாதத்தோடு ஒரு தீர்வு முயற்சியை ஜி.ரி.எஃப் தொடங்கியிருக்கிறது. மகாசங்கத்தின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பதால் அம்முயற்சிக்கு அதிக கவனிப்புக் கிடைத்திருக்கிறது.

ஹிமாலய பிரகடனம், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மென்மையான வரையறைகளை கொண்டிருப்பதாக ஜி.ரி.எஃப்பின் தலைவர் சுரேன் சுரேந்திரன் கூறுகிறார். ஆம். அவை மென்மையான வரையறைகள் தான். ஆனால் அதை மிகச்சரியான வார்த்தைகளிற் சொன்னால், மகா சங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறுவதற்காகத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அங்கே மென்மையாக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை.

மகாநாயக்கர்களை வணங்க வேண்டும் மதிக்க வேண்டும். எப்பொழுது என்றால் புத்தபகவான் கூறியது போல அவர்கள் சகலவற்றையும் துறந்த சன்னியாசிகளாக இருக்கும் பொழுது அவர்களை வணங்கலாம். அது ஆன்மீகம்.ஆனால் புத்த பகவான் வாழ்ந்து காட்டியதற்கு மாறாக மகாசங்கம் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பொழுது, அந்தக் கட்டமைப்புடன் பேசப் போகும் தமிழர்கள் மண்டியிட முடியாது. ஏனெனில் அது அரசியல். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை நீர்த்துப் போகச்செய்து மகாசங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறத் தேவையில்லை. பதிலாக தமிழ்மக்கள் தங்களுடைய பேர பலத்தை அதிகப்படுத்திக் கொண்டு மகா சங்கத்தோடு பேசப் போகலாம்.

ஜி.ரி.எஃப் உடனான சந்திப்பின 'போது அஸ்கிரிய பீடாதிபதி கூறியதாக ஒரு தகவலை சுரேன் சுரேந்திரன் தெரிவித்திருந்தார். யுத்த காலத்தில் தான் வன்னிக்கு வர விரும்பியதாக மகாநாயக்கர் கூறியுள்ளார். இருக்கலாம். அப்பொழுது தமிழ் மக்களிடம் பேர பலம் இருந்தது. அதனால் மகாநாயக்கர் வன்னிக்கு வர விரும்பியிருக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களின் பேர பலம் குறைந்து போய் விட்டது. அதனால் தான் தாயகத்துக்கு வெளியில் இருந்து தாயகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பிரகடனங்களை உருவாக்கும் ஒரு நிலை.

ஜி.ரி.எஃப் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவ படுத்தவில்லை. முதலில் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியிலும் இது தொடர்பாக விவாதித்திருக்க வேண்டும். அதன்பின் தாயகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள்,செயற்பாட்டாளர்கள் குடிமக்கள் சமூகங்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும்.ஆனால் அப்படி எதுவும் வெளிப்படையாக நடக்கவில்லை.



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இமாலய பிரகடனக் குழுவினரோடு வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காணப்பட்டார். இவர் சுமந்திரனுக்கு நெருக்கமானவர். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரகடனக்குழு வெளிப்படையாக எந்த அரசியல்வாதியோடும் தன்னை நெருக்கமாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஜி.ரி.எஃப் பிரதிநிதிகளும் பிக்குகளும் நல்லை ஆதீனத்தில் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்த பொழுது அதில் பங்குபற்றிய சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். உங்களை எனக்குத் தெரியாது என்பதே அது. அதுதான் உண்மை.

அதாவது தாயகத்தில் உள்ள தரப்புகளோடு ஜி.ரி.எஃப் உரையாடியிருக்கவில்லை .இது போன்ற முயற்சிகளை தாயகத்தை மையமாகக் கொண்டுதான் முன்னெடுக்க வேண்டும்.தாயகத்துக்கு வெளியில் இருந்து அல்ல.அந்த அடிப்படையில் பார்த்தால், இது ஒரு தலைகீழ் முயற்சி.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



இது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு திரட்சியாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. அங்கேயும் தனி ஓட்டங்கள் பலமாக உள்ளதைக் காட்டுகின்றது. அது மட்டுமல்ல, மேற்கு நாடுகளிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதியை ஐநாவிற்கு வீட்டு வேலைகள் செய்ய வேண்டிய ஒரு ஜனாதிபதியைஅந்த வீட்டு வேலைகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்க முயற்சிக்கும் ஒரு ஜனாதிபதியை அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய ஒரு ஜனாதிபதியைப் பாதுகாப்பது தான் இந்த நகர்வின் உள் நோக்கமா என்ற சந்தேகங்களை அதிகபடுத்துகின்றது. இந்த இடத்தில் தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் ஒரு விடயத்தை ஒப்புக 'கொள்ள வேண்டும். தாயகத்தில் பலமான ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சிகளின் கூட்டு இல்லாத வெற்றிடந்தான் இதற்கெல்லாம் காரணம். தாயகத்தில் பலமான ஒரு மக்கள் இயக்கம் அல்லது மக்கள் அதிகாரம் இருந்திருந்தால் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தாயகத்தை நீக்கி விட்டு இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. அல்லது தாயகத்தில் உள்ள சில அரசியல்வாதிகளின் மறைமுக அனுசரணையோடு இதை முன்னெடுத்திருக்க முடியாது. தாயகத்தில் தமிழ்மக்கள் ஒரு பலமான பேரம் பேசும் சக்தியாக இல்லை. அதனால் தான் தமிழ்மக்களின் தலை விதியை பெருமளவுக்கு வெளிச் சக்திகளே தீர்மானிக்க முயற்சிக்கின்றன. ஜெனிவாவில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அல்லது,துவாரகா வருகிறார் என்று படங் காட்டுகிறார்கள். அல்லது தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்து விட்டு, அதைக் கொழும்பில் வைத்து வெளியிடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு

# பின்னிப் பிணைந்த பாதுகாப்பு

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



மூன்று வருடங்களாக கொழும்பில் இந்தியாவின் தூதுவராகப் பணியாற்றிய விட்டு அவுஸ்ரேலியாவுக்கான தூதுவ ராக பொறுப்பேற்பதற்காக, இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஊடகம் ஒன் றுக்கு விரிவான செவ்வி ஒன்றை அளித் திருக்கிறார் கோபால் பாக்லே.

அதில் அவர், இந்திய இலங்கை இடையிலான உறவுகள் மற்றும் பாது காப்பு குறித்து முக்கியமாகப் பேசியிரு க்கிறார். இலகுவில் எடை போட முடி யாத இராஜதந்திரிகளில் ஒருவராகவே கோபால் பாக்லே கருதப்பட்டிருக்கிறார். கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் கொழும்பு வந்து, பொருளாதார நெருக் கடிக்கு மத்தியில் இரு தரப்பு உறவு களைக் கட்டியெழுப்புவதற்காக கடுமை யாக முயற்சி செய்த அவர், இந்திய சீன அதிகாரப் போட்டி தீவிரமடைந்திருக் கின்ற கட்டத்தில் தான், கொழும்பில் இருந்து வெளியேறுகிறார். இலங்கையில் இந்தியாவும், சீனாவும் போட்டி போடத் தொடங்கி மறைமுகமாக மோதத் தொட ங்கி பல ஆண்டுகளாகி விட்டன. கொவிட் தொற்று பரவத் தொடங்கிய போது, அதற்குக் காரணமான நாடு என்ற குற்றச்சாட்டுகளால், உலகம் முழு வதினதும் வெறுப்பை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்குள்ளானது சீனா.

சில மாதங்களில், கொவிட்டுக்கு எதிரான தடுப்பு மருந்தை வைத்து பனிப்போர் உருவானது. அமெரிக்கா பைசர், மொடேர்னா தடுப்பு மருந்துகளை உரு வாக்கியது. சீனா சினோபார்ம், சினோ வாக் ஆகியவற்றை உருவாக்கியது. ரஷ்யா ஸ்புட்னிக் வி மருந்தைக் கண்டு பிடித்தது. இந்தியா அஸ்ட்ராசெனிகா, கொவிட் ஷீல்ட் மருந்துகளை உற்பத்தி செய்தது. எல்லா நாடுகளுக்கும் தங்க ளின் எல்லா குடிமக்களுக்கும் செலுத்த வேண்டியிருந்ததால், தடுப்பூசிகள் பெரு மளவில் தேவைப்பட்ட போது, இலங்கை போன்ற நாடுகளுக்கு அது கிடைப்பது கடினமாக இருந்தது.

அந்தச் சூழலில் முதலில் இந்தியாவில் இருந்தே, ஒக்ஸ்போர்ட்னிகா தடுப்பூசி இலங்கைக்கு கிடைத்தது. இந்தியாவில் நோய்ப் பரவல் அதிகரித்த போது, தங்களின் குடிமக்களுக்கே முதலில் என்ற கொள்கையை இந்தியா கடைப் பிடித்தது. அதனால் இலங்கை உள்ளி ட்ட எந்த நாட்டுக்கும் கொவிட் தடுப் பூசிகளை இந்தியா வழங்க மறுத்தது. அப்போது ஸ்புட்னிக் வி தடுப்பு மரு ந்துகளை ரஷ்யா வழங்க முன் வந்தது. அங்கும் அதே பிரச்சினை. நோய்ப்பரவல் தீவிரமாக ரஷ்யாவும் தடுப்பு மருந்து களை வழங்கவில்லை. அந்தக் கட்டத் தில் சீனாவின் சினோபார்ம் தடுப்பு மருந்தே இலங்கையர்களுக்கு கைகொடு த்தது. அதன் பின்னர் ஒரு கட்டத்தில் அமெரிக்கா பெருமளவில் பைசர் தடுப்பூசி மருந்துகளை வழங்கியது.

கொவிட் தடுப்பு மருந்து வழங்குவ திலேயே இலங்கையை மையப்படுத்திய பூகோள அரசியல் போட்டி இடம் பெற்றது. கொவிட்டுக்குப் பின்னர், நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அந்தக் கட்டத்தில் தான், இலங்கைக்கு இந்தியா தனது விஸ்வரூபத்தைக் காண்பித்தது.

கொழும்பு துறைமுகத்தில் ஒரு கொள் கலன் இறங்குதுறை, கொழும்பு துறை முக நகரம், அம்பாந்தோட்டை துறை முகம் என, இலங்கையில் சீனாவுக்கு பல முக்கியமான முதலீட்டு மூலோபாய நலன் கள் இருந்தன. ஆனாலும், சீனா உதவி களை வழங்கத் தயங்கிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், இந்தியா 4 பில்லியன் டொலர்களை வழங்கியது. அந்த உதவி இலங்கைக்குக் கிடைக்கா மல் போயிருந்தால், மிகமோசமான நெரு க்கடிகளை நாடு எதிர் கொண்டிருக்கும்.

பொருளாதார நெருக்கடியின் போது, இந்தியா முன்னுதாரணமற்ற வகையில் அந்த உதவியை வழங்கியது. கோபால் பாக்லே தனது செவ்வியில், 'ஒரு நாடு நெருக்கடியில் சிக்கியிருந்த போது இலங்கைக்கு வழங்கியது போல, விரை வாகவும் வலுவாகவும் ஆதரவு வழங்கி யது போன்று இந்தியா முன்னொரு போதும் உதவிகளையோ ஆதரவையோ



வழங்கியதில்லை' என்று குறிப்பிட்டிரு ந்தார். இலங்கை இந்திய உறவுகளை வலுவாக பேணுவதற்கான சந்தர்ப்பமாக இந்தியா அதனைக் கருதியது. இந்தப் பொருளாதார உதவியின் மூலமாக இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியும் என்று இந்தியா நம்பி யிருந்ததால், அது வீணாகிப் போனது என்றே குறிப்பிட லாம்.

ஏனென்றால், பொருளாதார நெருக்கடி க்குப் பின்னரான கால கட்டத்தில் இந்தியாவுடன் இலங்கை மிகச் சிறப்பான உறவுகளை வைத்திருக்கிறது என்று குறிப்பிட முடியாது. அதற்கு முக்கிய மான காரணம் சீனா. சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகள் காரணமாக, இந்தியாவை முழுமையாக திருப்திப்படுத்த முடியாத நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கை க்கு வரத் தொடங்கியுள்ள சூழலில், இரு தரப்புக்கும் இடையில் பரஸ்பரம் நம்பிக் கையற்ற நிலை அதிகரிக்கத் தொடங்கி யிருக்கிறது. இது தொடர்பான கேள்வி க்கு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அளித்திருக்கின்ற பதிலில்,

இந்தியா பாதுகாப்பாக இருந்தால், இலங்கையும் பாதுகாப்பாக இருக்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதனை அவர் ஓர் எச்சரிக்கையாக மாத்திரம் குறிப்பிடவில்லை. இலங்கை பாதுகாப் பாக இருந்தால் இந்தியாவும் பாது காப்பாக இருக்கும்' என்றொரு வசன த்தை அவர் பயன்படுத்தியிருக்கிறார். இந்த இரண்டாவது கூற்றை அவர் குறிப்பிடாமல் போனால், நிச்சயம் அது எச்சரிக்கையாகவே கருதப்பட்டிருக்கும். இந்தியா பாதுகாப்பாக இருந்தால் தான் இலங்கையும் பாதுகாப்பாக இருக்கும் என்பது, இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அது இலங்கையையும் பாதிக்கும் என்று கூறுவதற்கு சமமான தாகும். இந்திய பிராந்தியத்தின் பாது காப்பும், இந்தியாவின் பாதுகாப்பும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது என்று கோபால் பாக்லே குறிப்பிடுவது, இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டால், அது இந்தப் பிராந்தியத்து க்கே அச்சுறுத்தலாக மாறும் என்பதை தான். இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சு றுத்தலை ஏற்படுத்துவதற்கு இலங் கையை ஒரு தளமாக பயன்படுத்த அனுமதியோம் என்று இலங்கை அரசாங் கம் பல முறை வாக்குறுதிகளை கூறி யிருந்தாலும், இந்தியா அதனை நம்ப மறுக்கிறது. சீனாவே அதற்கு முக்கிய மான காரணம். சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகளும், நெருக்க மும், இந்தியாவுக்கு அந்த வாக்குறு தியை நம்ப விடாமல் தடுக்கிறது. இதனை இலங்கை புரிந்து கொள்ள வில்லையோ, அல்லது புரிந்து கொள் ளாதது போல நடிக்கிறதோ தெரிய வில்லை. கோபால் பாக்லேயின் செவ்வி யில், இலங்கை பாதுகாப்பானதாக இருந்தால் இந்தியாவும் பாதுகாப்பான தாக இருக்கும் என்று குறிப்பிட்டதை இரண்டு நிலைகளில் இருந்து பார்க்க வேண்டும். ஒன்று கடந்த காலம். இன்னொன்று நிகழ் காலம் மற்றும் எதிர் காலம். இலங்கையில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தொடங்கிய போது இந்தியாவும் அதற்கு ஆதரவு வழங்கி யது. அந்த ஆயுதப் போராட்டத்தை பயன்படுத்திக் கொண்டு, இந்தியா நாட்டைப் பிரிக்க முனைகிறது என்ற தவறான கருத்தே இலங்கையிடம் காண ப்பட்டது. 40 ஆண்டுகளுக்கு முன்னர், 1983 டிசெம்பர் 11ஆம் திகதி வெளி யாகிய 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' இதழு க்கு, இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக, இந்தியாவுடன் எந்த உடன்படிக்கையும் செய்து கொள் ளப் போவதில்லை என இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தெரிவித் திருந்தார். இந்தியா ஒரு சக்தி வாய்ந்த நாடு, எங்களால் இந்தியாவை எதிர்த்துப் போராட முடியாது, ஆனால், இந்தியா எம் மீது படையெடுக்க நினைத்தால் நாங்கள் அடிபணிய மாட்டோம்' என் றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், அதே ஜே.ஆர். ஜயவர்தன, 1987இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், இந்தியாவுடன் அமைதி உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டார். இது எப்படிச் சாத்திய மானது? இலங்கையின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்குவது தொடர்பாக இந்தியா ஒரு எல்லைக் கோட்டை வைத்திருந்தது.

அந்த எல்லைக் கோட்டை அடைந்த வுடன், இலங்கை அரசாங்கத்தைப் பாது காக்கும் செயற்பாட்டில் இறங்கியது. அப்போதைய முயற்சிகள் இந்தியாவுக்கு வெற்றியளிக்கவில்லை. ஆனால், 2009 இல் விடுதலைப் புலிகளை அழித்து இலங்கையின் பாதுகாப்பு அச்சுறுத்தலை நீக்குவதற்கு இந்தியா தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்து கொடுத்தது. கோபால் பாக்லே குறிப்பிட்டது போல, இந்தியா தனது பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுவதை மாத்திரம் தடுக்க முற்பட வில்லை. இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையும் தடுக்க முற்பட்டது.(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சந்தேகத்தை நீட்சிப்படுத்தும் இரண்டாம் உலகத்தமிழர் பேரவை

**கட்டுரையாளர்:-**
**கனடாவில் இருந்து**
**- பனங்காட்டான் -**

இலங்கையில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படுகிறதோ இல்லையோ, எப்போதும் ஏதாவது ஒரு புது விடயம் பேசுபொருளாகி, ஊடகங்களில் பரபரப்பான செய்தியாகி, சம்பந்தப்பட்டவர்களின் படங்கள் அங்குமிங்கும் பப்ளிசிட்டியாகி, பின்னர் எல்லாமே காணாமற் போய் விடுவது பழக்கப்பட்டு விட்டது.

இந்தப் பட்டியலில் இப்போது காட்சி கொடுத்திருப்பது உலகத்தமிழர் பேரவை என்ற பெயரில் ஓர் அணி. இதனை ஓர் அமைப்பு என்றோ, மக்களால் தெரிவான குழு என்றோ சொல்ல முடியாது. பொழுது போக்குக்காக சிலர் கூட்டுச் சேர்ந்து ஒரு பயணத்தை தாங்களும் இருக்கிறோம் என்று காட்டுவதற்காக மேற் கொண்டுள்ளனர் என்றே சொல்லலாம் போலத் தோன்றுகிறது.

அதிலும் ஒரு வில்லங்கம் இருக்கிறது. ஒறிஜினல் உலகத் தமிழர் பேரவை என்பது 2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர் நாடுகளிலுள்ள பல தமிழர் அமைப்புகளைச் சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பு.

அப்போது ஐரோப்பாவிலிருந்து செயற்பட்ட வண.பிதா .மானுவல் அடிகளார் எடுத்த முயற்சியின் பலனாக உருவான இந்தக் கூட்டமைப்புக்கு அவரே தலைமையும் தாங்கினார். அப்போது பிரித்தானிய தமிழர் பேரவையில் ஒருவராகவிருந்த சுரேன் சுரேந்திரன் என்பவர் இதன் பேச்சாளராக விளங்கினார்.



உலகத்தமிழர் பேரவை ஒருபுறம், நாடு கடந்த அரசாங்கம் இன்னொரு புறமென நொந்து போயிருந்த தாயகத் தமிழருக்காக பல காரியங்களை ஒப்பேறப் போகின்றன என்று பலரும் நம்பியிருந்தனர். வண.பிதா இமானுவல் அடிகளார் ஓய்வு பெற்றதோடு உலகத் தமிழர் பேரவையும் மூடப்பட்டது. இதனுடன் சம்பந்தப்பட்டவர்களில் சிலர் அவ்வப்போது தலை காட்டினராயினும் பின்னர் சமூகத்தின் பார்வையிலிருந்து விலகிப் போயினர். இந்தப் பின்னணியில் பார்க்கின் இப்போது வலம் வருகின்ற கூட்டத்தினரை, இரண்டாவது உலகத் தமிழர் பேரவை என்றே குறிப்பிட வேண்டும். அதுவே சரியுங்கூட.

அது மட்டுமன்றி இக்கூட்டத்தில் இடம் பெற்றிருப்பவர்கள் புலம்பெயர் நாடுகளிலிருந்து புதிய பேரவைக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல. அல்லது அதிகாரபூர்வமாக அமைப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களும் அல்ல. இவர்களை உதிரிகள் அல்லது சுயேட்சைகள் (சுய இச்சைகள்) என்றே சொல்ல வேண்டும்.

உதாரணத்துக்குக் குறிப்பிடுவதானால் இக்குழுவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவும் மகனும் (சுரேன் சுரேந்திரனும் அவரது மகனும்) உள்ளனர். கணவனும் மனைவியுமாக ஒரு தம்பதியினர் இடம் பெற்றுள்ளனர். வட அமெரிக்காவிலுள்ள அமைப்பொன்றின் முன்னாள் தலைவரும் உள்ளார். இப்படித் தான் இரண்டாவது உலகத் தமிழர் பேரவை பிறப்பெடுத்து தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கு கிளம்பியுள்ளது. உலகளாவிய ரீதியில் கட்டமைப்புகளாக யங்கும் தமிழர்களின் நேர்த்தியான அமைப்புகளை அவமதிக்கும் செயலாகவே இவர்களின் நடவடிக்கையை பலரும் பார்க்கின்றனர்.

இந்த இரண்டாம் உலகத் தமிழர் பேரவை இலங்கையிலுள்ள சில பௌத்த துறவிகளைப் பொறுக்கியெடுத்து – எந்த அடிப்படையில் என்று குறிப்பிட முடியாதவாறு, அவர்களின் கூட்டுக்கு சிறந்த இலங்கையருக்கான சங்க மன்றம் என்று பெயர் சூட்டி, அவர்களையும் தங்களுக்குக் காவலர்களாக அணைத்துக் கொண்டு திரிகிறது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் தாயக உறவுகளின் வாழ்வுரிமைக்காகவும் போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறலை வேண்டியும் ஜனநாயக ரீதியாக இயங்கி வருகின்றனர். முக்கியமாக, மக்களால் தெரிவான மக்கள் அவைகளைக் கூட்டிணைத்து ஒரே நேர்கோட்டில் தொழிற்பட்டு வருகின்றனர். இரண்டாவது உலகத் தமிழர் பேரவையின் தலைவரென அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் சுரேந்திரனை எப்போது எங்கே இப்பதவிக்கு யார் தெரிவு செய்தனர் என்பது எவருக்கும் தெரியாது. பிரித்தானியாவில் வசிக்கும் இவருக்கு உலகளாவிய தமிழ் தேசிய சபை 2010 ஜனவரியில் அங்கு நடத்திய சுதந்திர இறைமையுள்ள தமிழ் ஈழத்துக்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 99.3 வீதமானவர்கள் ஆதரவாக வாக்களித்தது தெரியாதிருக்க முடியாது.

இதே கருத்துக்கணிப்பு இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், நோர்வே, ஆஸ்திரேலிய நாடுகளிலும் சமகாலத்தில் நடத்தப்பட்டது. சகல நாடுகளிலும் 99 வீதத்துக்கும் கூடுதலானவர்கள் சுதந்திர இறைமையுள்ள தமிழீழத்தை வேண்டி வாக்களித்ததையும் சுரேன் சுரேந்திரன் மறந்திருக்க முடியாது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்திய திம்புக் கோட்பாடும், வட்டுக்கோட்டைத் தீர்மானமும் பிரகடனம் செய்யப்பட்ட வரலாற்றை இலகுவாக தமிழின விரோதிகளாலும் மறக்க முடியாது.

இவைகளுக்கப்பால் தமிழரசுக் கட்சியின் ஒரு சிலரால் சொல்லப்பட்டு வந்த ஒருங்கிணைந்த – பிளவுபடாத இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காண்பதற்கு அதற்கென ஆறு அம்சத்தை உள்ளடக்கிய ஒரு வரைவைத் தயாரித்து அதற்கு இமயமலைப் பிரகடனம் என்று பெயர் சூட்டியிருப்பது, துவரை ஈழத்தமிழர் நடத்திய அத்தனை விடுதலைப் போராட்டங்களையும் மலினப்படுத்தியுள்ளது.

இந்தப் பேரவையினர் சிறந்த இலங்கையின் சங்கம் என்ற பௌத்த துறவிகளையும் இணைத்துக் கொண்டு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல சந்திப்புகளை துவரை நடத்தியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, .ரா.சம்பந்தன், ராவுப் ஹக்கீம், மனோ கணேசன் மற்றும் ஜே.வி.பி.தலைவர்கள் உட்பட பலரை சந்தித்து இமயமலைப் பிரகடன பிரதிகளை வழங்கியுள்ளனர். அனைவரும் அதனைப் பெற்றுள்ளனர். சிலர் ஆசிர்வதித்துள்ளனர். சிலர் ஆலோசனை கூறியுள்ளனர். இவர்களுள் இருவர் வழங்கிய ஆலோசனைகள் கூர்மையான அவதானிப்புக்குரியவை.

உலகத் தமிழர் பேரவை என்ற பெயரை .லங்கையர் பேரவை என்று மாற்ற வேண்டுமென சஜித் பிரேமதாச ஆலோசனை கூறியுள்ளாராம். அதாவது தமிழர் என்ற பெயரே தமிழர்கள் அங்கம் வகிக்கும் அமைப்புக்கு இருக்கக்கூடாது என்பதில் எதிர்கால ஜனாதிபதியாக வர விரும்பும் சஜித் பிரேமதாச அக்கறையாக உள்ளார்.

சிங்கள பௌத்த நாடு என்ற சிந்தனையும், தமிழருக்கு மட்டுமே தனித்தமிழ் நாடு என்ற சிந்தனையும் மாற வேண்டுமென்று மனோ கணேசன் பௌத்த துறவிகள் முன்னால் பேரவையினருக்கு தம்ம போதனை வழங்கியுள்ளார். இவரது கூற்றின் உண்மையான அர்த்தம் என்ன என்பது சரியாகப் புரியவில்லை.



மற்றொரு முக்கியமான கருத்தை மகாநாயக்கர்களும், கத்தோலிக்க பேராயர் மல்கம் ரஞ்சித்தும் தெரிவித்ததாக சுரேன் சுரேந்திரன் கூறி வருகிறார். நெருக்கடியான காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு பல தடவை தாம் கேட்டதாகவும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் மகாநாயக்கர்கள் தெரிவித்தனராம்.

அது போன்று பேராயர் மல்கம் ரஞ்சித்தும் விடுதலைப் புலிகளின் தலைவரை சந்திக்க விரும்பியதாகவும், மன்னார் ஆயராகவிருந்த ராயப்பு யோசப் ஆண்டகையுடன் துபற்றிப் பேசியதாகவும், அந்த விருப்பம் கைகூடவில்லையெனவும் அவர் தெரிவித்திருந்தாராம்.

மகாநாயக்கர்களும் பேராயரும் காலம் கடந்து தெரிவிக்கும் இந்த விடயங்களின் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் இல்லை. உண்மையிலேயே இவர்கள் அந்த எண்ணம் கொண்டவர்களாக இருந்திருப்பின் ஏதாவது ஒரு வகையில் அப்போது தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்க முடியும். மாறாக யுத்தத்தை முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்கியவர்கள் இவர்கள்.

நவாலி தேவாலயத்தில் குண்டு வீச்சின் போது கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்காக, குழந்தைகளுக்காக மனமிரங்கி ஒரு வார்த்தை கூட அனுதாபம் தெரிவிக்காத பேராயர் விடுதலைப் புலிகளின் தலைமையை சந்திக்க விரும்பினார் என்றால் யார் நம்புவார்? யுத்தமுனைக்குச் சென்ற படைத்துறை தலைமைகளுக்கு நூல் கட்டி ஆசி வழங்கிய மகாநாயக்கர்கள் இப்போது விரும்பினால் எதனையும் கூறலாம்.

ஆனால், இவர்கள் கூறுவதை தாயகத் தமிழர்கள் நம்ப வேண்டுமென்பதற்காக அவர்களிடம் இலகுவாக விற்பனை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளனர் இரண்டாம் உலகத் தமிழர் பேரவையினர். இந்தப் புருடாக்களை நம்புவதற்கு தமிழர்கள் இனியும் தயாரில்லை என்பதை தெரியப்படுத்தும் வகையில் நெற்றிக்கு நேராக எடுத்துக் கூறியுள்ளார் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன். நல்லை ஆதீனத்தில் இவர்களுடன் நடந்த சந்திப்பில் அவர் எடுத்துக் கூறியது இது தான்:

இன்று நீங்கள் எல்லோரும் இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. உங்களைப் போல் பலர் இங்கே தந்து சந்திப்புகளை மேற்கொள்கிறார்கள். ஆனால் எந்தத் தீர்வோ எந்த முடிவோ எட்டப்படவில்லை` என்ற ஆறு. திருமுருகனின் நெற்றிக்கு நேரான கருத்துக்கு அங்கு போனவர்களிடம் எந்தப் பதிலுமில்லை.

ஆனால், இவர்கள் யார், ஏன் உருவாக்கப்பட்டார்கள், எவருடைய ஆலோசனையில் இயங்குகிறார்கள் என்பது ஓரளவுக்கு தெரிய வந்துள்ளது.

சுரேன் சுரேந்திரன் அவரது குழுவின் ஒவ்வொரு விடயத்தையும் கைத்தொலைபேசி வழியாக உடனுக்குடன் ஒருவருக்கு தெரிவித்து வருவதாகவும், அவரை `சுமோ, சுமோ` என்று விளித்து உரையாடியதாகவும் அக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் கூறி வருகின்றனர். யார் அந்த சுமோ?

அதேவேளை, இமயமலைப் பிரகடனத்துக்கும் தமக்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாதென தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்திருப்பது, எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்பதையே நினைவுபடுத்துகிறது.

ஒரு சந்தேகம் தனக்குச் சம்பந்தமில்லையென்று சுமந்திரன் சொல்லலாம். ஆனால் ரணிலுக்குச் சம்பந்தமில்லையென்று எவ்வாறு கூற முடியும்? மலிந்தால் எல்லாம் சந்திக்கு வரும்.

# "வரலாற்று சம்பவம்" இந்திய நாடாளுமன்ற அமளியால் இதுவரை 141 எம்.பி.க்கள் இடை நீக்கம்!

புதுடெல்லி:இந்திய நாடாளுமன்ற மக்களவையில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49 எம்.பிக்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர். மக்களவை இன்று காலை கூடியதும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. கடந்த 13-ம் தேதி மக்களவையில் நிகழ்ந்த பாது காப்பு அத்துமீறல் குறித்து பிரதமர் மோடி அல்லது உள்துறை அமைச்சர் அமித் ஷா அவைக்கு வந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்பதை வலியுறு த்தியும் 90க்கும் மேற்பட்ட எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண் டித்தும் அவர்கள் கோஷங்களை எழுப் பினர்.

மேலும் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் அமளியில் ஈடுபட்டனர். அந்த பதாகைகளில் பிரதமர் மோடியின் படம் விகாரமாக சித்தரிக்கப்பட்டிருப்பதாகக் கூறி சபாநாயகர் கண்டித்தார். பதாகை களை ஏந்த வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தினர். எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஏற்காததால்இ அவை கூடிய சிறிது நேரத்துக்குள் அவையை அவர் ஒத்தி வைத்தார்.

பகல் 12.00 மணிக்கு அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து அவையை நடத்திய ராஜேந்திர அகர்வால் அவையை பகல்



12.30க்கு ஒத்தி வைத்தார். மீண்டும் அவை கூடியபோது மீண்டும் எம்.பி. க்கள் அமளியில் ஈடுபட்டனர். இதை யடுத்து சசி தரூர் மணிஷ் திவாரி ஃபருக் அப்துல்லா உள்ளிட்ட 49 எம்.பி க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக அவை மதியம் 2 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் மாநிலங்களவை யிலும் காலை முதலே அமளி நிலவி யது. இதன் காரணமாக அவைத் தலை வர் ஜக்தீப் தன்கர் அவையை 12 மணி வரை ஒத்தி வைத்தார். அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் மீண் டும் அமளியில் ஈடுபட்டதால் அவையை மதியம் 2 மணி வரை ஒத்திவைப்பதாக அவர் அறிவித்தார்.

வரலாற்று 'சம்பவம்' நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக பிரதமர் மோடி அல்லது மத்திய உள் துறை அமித் ஷா விளக்கம் அளிக்க கோரி அமளியில் ஈடுபட்டதால் திங்கள் கிழமை மட்டும் காங்கிரஸ் எம்.பி.க்கள் உட்பட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 45 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட னர். ஏற்கெனவே மாநிலங்களவையில் திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. டெரிக் ஓ பிரையன் கடந்த 14ம் தேதி இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதையடு த்து மாநிலங்களவையில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்கள் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்தது.

இந்நிலையில் மக்களவையில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49எம்.பிக்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர். இதனால் ஒட்டு மொத்தமாக இதுவரை இந்தக் கூட்டத் தொடரில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்களின் எண்ணி க்கை 141 ஆக அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு கூட்டத் தொடரில் இத்தனை எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டது வரலாற்றுச் சம்பவமாக கருதப்படுகிறது.

# இமாலயப் பிரகடனம் தெளிவற்றதாக உள்ளது அஸ்கிரிய பீட மெதகம தம்மானந்த தேரர் கருத்து

பன்முகத்தன்மை கொண்ட சமூக த்தை கட்டியெழுப்புவதற்காக தமிழ் புலம்பெயர் அமைப்பான உலகதமிழர் பேரவை பௌத்தமதகுருமார்கள் குழு வொன்றுடன் இணைந்து முன்னெடு த்துள்ள இமாலய பிரகடனம் தெளி வற்றது என தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடம் எனினும் முன்னேற்றகரமான விடயங்கள் இடம் பெற்றால் அதற்கு பௌத்தமதகுருமார் ஆதரவளிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உலக தமிழர் பேரவையும் பௌத்தமதகுருமாரும் இணைந்து இமாலயப்பிரகடனத்தினை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடம் கையளித்தி ருந்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்து ள்ள அஸ்கிரிய பீடத்தின் பேரவை களின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் தேசிய ஐக்கியத்தினையும் நல்லி ணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் அஸ்கிரிய பீடம் குழப்பாது என தெரி வித்துள்ளார். எனினும் அது நாட்டின் சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்காமல் இருந்தால் மாத்திரமே அதற்கு ஆதரவளிப்போம் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்

எனினும் பிரகடனத்தின் நோக்ககங்கள் தெளிவற்றதாக உள்ளது என தெரிவித் துள்ள அவர் இதனை நடைமுறை ப்படுத்துவதற்கு முன்னர் இந்த பிரகட னத்தின் நோக்கம் தெளிவாக இல்லை அதிகாரிகள் பிரகடனம் நோக்கம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏதாவது சிறந்த விடயங்கள் இடம் பெற வேண்டும் என அஸ்கிரிய பீடம் விரும்புகின்றது குறிப்பிட்ட பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து கருத்து தெரிவிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பன்முகத்தன்மை கொண்ட இலங் கையை கட்டியெழுப்புவதற்கு உதவு மாக இருந்தால் பிரகடனத்திற்கு ஆதர வளிப்போம் என மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலம்பெயர் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனை வரும் கடும்போக்குவாதிகளோ அல் லது நாட்டுக்கு எதிரானவர்களோ அல்ல என தேசிய பாதுகாப்பு குறித்த ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இந்த விடய த்தை தெரிவித்துள்ளார். இது தொட ர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

புலம்பெயர் சமூகத்தினை நாட்டின் அபிவிருத்தியில் இணைத்துக் கொள்ள வேண்டும். புலம்பெயர் மக்களை முதலீடு செய்ய ஊக்குவிப் பதுடன் அவர்களுக்கு நலன்கள் வழங் கப்பட வேண்டும்.

இலங்கையை ஈர்ப்பு மிக்க ஓர் இட மாக மாற்ற வேண்டுமாயின் வெளிப் படைத்தன்மையுடன் செயற்பட வேண் டும். புலம் பெயர்ந்த அனைவரையும் இனவாதிகள் என்ற அடிப்படையில் பார்க்கக் கூடாது என அவர் வலியுறு த்தியுள்ளார்.

# வெளிநாட்டு தமிழருடன் பேசும் ஜனாதிபதி உள்நாட்டில் தமிழருக்கு தவறான சமிஞ்சை

வெளிநாட்டு தமிழருடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்கு தவ றான சமிக்ஞைகளை தருகிறார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் அறிக்கையொன்றில் மேலும் கூறியதாவது.

உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர் களை தடை நீக்கம் செய்து. அழை த்து ஜனாதிபதி ரணில் பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் உள்நாட்டில் தமிழரு க்கு தொடர்ந்து தவறான சமிக்ஞை களை தருகிறார். இதில் ஒன்று. மக்களுடன் எந்தவித நேரடி தொடர்பு களும் இல்லாத அமைச்சர் டிரான் அலசின் பேச்சை கேட்டு எனது தொகுதி கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பித்துள் ளமை ஆகும்.

இரண்டாவது. வடக்கு கிழக்கிலா வாது மாகாணசபை தேர்தல்களை நடத்தி அங்கே மாகாணசபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்ப தாகும். மூன்றாவது. பாதிட்டில் ரணில் உறுதியளித்த. மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பை யும். அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப் படும் 400 கோடி ரூபாவையும் இப் போது யார் வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வாரம் அவரது பாராளுமன்ற அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்வி களை எழுப்பி கோரிக்கை விடுத்தேன். தற்போது ஜனத்தொகை புள்ளிவிபர கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக. உங்கள் அமைச்சர் டிரான் அலசின் பொலிஸ்காரர்களை தமிழர்களின் வீடு களுக்கு சிங்களம் மட்டும் படிவங்களு டன் அனுப்பி. சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து. எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதட்டங்களை ஏன் ஏற்படுத்துக்கிறீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலாவது மாகாணசபை தேர்தல்களை நடத்தி. அங்கே முதற்கட்டமாக மாகாணசபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழு. இழு என்று இழுத்து கொண்டே போகிறீர்கள்?

மலைநாட்டு பெருந்தோட்டங்களில். நீங்கள் பாதிட்டில் உறுதியளித்த 10 பேர்ச் காணி துண்டுகளை. பெருந் தோட்டங்களில் வாழும் குடும்பங்களு க்கு வழங்குங்கள்.

இந்திய. இலங்கை வீடமைப்பு திட்ட ங்களின் வீடு கட்டும் பணிகள். அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும். ஆகவே காணி வழங்களுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாயை பயன்படுத்தி. காணிகளை பிரித்து வழங்கலாம். ஆனால். இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறு ப்பையும். அதற்கு ஒதுக்கப்பட்டதாக



கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?

இந்த கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டு குடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும். இவை தொடர் பில் கடந்த வாரம் எதிர்க்கட்சி தலை வர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்தி ப்பில். இலங்கைக்கான அமெரிக்கா. இந்தியா. சுவிஸ். நெதர்லாந்து. கனடா. பிரான்ஸ். தென்னாபிரிக்கா. இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான். ஆஸ்திரேலியா. பிரிட்டன். நியூசிலா ந்து. ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதர்களும். முதன்மை அதிகாரிகளும் கலந்துக் கொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்து கூறி இருந் தேன்.

# உண்மை - நல்லிணக்க பொறிமுறை அரசின் காலம் கடத்தும் செயல் ஜப்பான், சுவிஸ், தென்னாபிரிக்கா இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைப்பு!

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அளித்த வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபித்து அமுலாக்க முயற்சிப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவிப்பதானது காலத்தைக் கடத்தும் செயலாகும் என்று வடக்கு தமிழ் பிரதிநிதிகள் ஜப்பான், தென்னாபிரிக்கா,மற்றும் சுவிட்சர்லாந்து இராஜதந்திரிகளிடத்தில் நேரடியாக எடுத்துரைத்துள்ளனர்.

வடக்கிற்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சுவிட்சர்லாந்து தூதுவர் சிரி வொல்ட் மற்றும் தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர் சாண்டில் ஷால்க் ஆகியோருக்கும் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சனிக்கிழமை (16) இரவு யாழில் உள்ள தனியார் விடுதியில் சந்திப்பொன்று நடைபெற்றது.

தமிழ்க் கட்சிகளின் சார்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது தமிழ் அரசியல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படுகின்றனவா, அது எவ்வாறான விடயங்களில் உள்ளன என்ற கேள்வி இராஜதந்திரிகளால் முன் வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சி.வி.விக்னேஸ்வரன், சிறீதரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரன் ஆகியோர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகம் என்பதில் தமக்கிடையே ஒருமித்த கருத்துக் காணப்படுவதாகவும், இந்த நாட்டில் ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை காண முடியாது என்பதிலும், ஏகோபித்த நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் 3ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான வரலாற்றைக் கொண்டவர்கள். அவர்களின் வரலாற்று வாழிடம் தான் வடக்கு, கிழக்கு பிரதேசங்களாகும். இந்த விடயத்தினை சிங்கள் மக்கள் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தவறான வரலாற்றுப் புனைவுகளை மையப்படுத்தி தமிழர்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக கருதுகின்றார்கள்.

இந்த நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் இந்தநாட்டின் பூர்வீகக் குடிகள் சம்பந்தமாக வரலாற்று நூலொன்று துறை சார்ந்தவர்களால் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு தாங்கள் (இராஜதந்திரிகள்) ஒத்துழைப்புக்களைச் செய்ய வேண்டும்.

அதே போன்று இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் பற்றிய உரையாடல் முக்கியமானது. ஆனால் நாட்டின் தற்போதைய சூழலைப் பார்த்தீர்கள் என்றால், கிணற்றுக்குள் தத்தளிக்கும் ஒருவருக்கும், கிணற்றுக்கு வெளியில பாதுகாப்பாக இருக்கும் ஒருவருக்கும் இடையில் தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதற்கு முனைகின்றீர்கள்.



இந்த முயற்சியானது பொருத்தமான தொன்றல்ல. இது வெற்றி பெறுவது மிகவும் கடினமானது. ஆகக் குறைந்தது கிணற்றுக்குள் இருப்பவரை வெளியே கொண்டுவந்ததன் பின்னர் அவ்விதமான உரையாடலை மேற்கொள்வதே பொருத்தமானது. ஆகவே முதலில் அதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்க வேண்டும்.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கும், வெள்ளையினத்தவர்களுக்கும் இடைலான நல்லிணக்க உரையாடல் முதலில் இரு தரப்பினரும் சமமானவர்கள் என்ற நிலைமை உருவாக்கப்பட்டதன் பின்னர் தான் ஆரம்மாகியிருந்தது. ஆகவே முதலில் தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள், அவர்கள் பூர்வீகமானவர்கள். அவர்களுக்கும் சம அந்தஸ்து உள்ளது என்பது பெரும்பான்மை சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அந்த நிலைமை உருவாகுவதாக இருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும். அந்தத் தீர்வு ஒற்றையாட்சிக்குள் ஏற்படுத்த முடியாது என்றார்.

சிவஞானம் சிறிதரன் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான உள்நாட்டிலும், சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது காலங் கடத்தி வருகின்றது. இவ்வாறான நிலையில் தான் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் ஆராயப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் உண்மைகளை கண்டறிந்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்திருந்தது. இந்த ஆணைக்குழு இனப்பிரச்சினைக்கான தீர்வு, நீதியை நிலைநாட்டில், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை பரிந்துரைகளில் உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தாது கிடப்பில் போட்ட அரசாங்கம் பின்னர் பரணகம ஆணைக்குழுவை ஸ்தாபித்தது.

அதன் அறிக்கையும் கையளிக்கப்பட்டதன் பின்னர் கிடப்பில் போட்டதோடு தொடர்ச்சியாக 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக சர்வதேச விசேட அறிக்கையாளர்கள், நிபுணர்களின் பங்கெடுப்புடன் உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால், எந்தவொரு விடயங்களும் நடைமுறையில் முன்னெடுக்கப்படவில்லை. போர் முடிந்து 14 ஆண்டுகள் நிறைவுக்கு வந்து விட்டது. அரசாங்கம் தாமாகவே முன்வந்து நியமித்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளைக் கூட நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இல்லை.

அவ்வாறான நிலையில் தற்பொது உண்மை, மற்றும் நல்லிணக்க பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதானது, அரசாங்கத்தினை பாதுகாக்கும் அல்லது காலங்கடத்தும் செயற்பாடாகவே இருக்கும் என்பதே யதார்த்தமானது.

அது மட்டுமன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அவர் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து விட்டு பின்னர் அவ்வமைப்பை பிளவுபடுத்துவதில் தான் கவனம் செலுத்தினார்.

அவ்விதமானவரின் தலைமையின் கீழ் உண்மை, நல்லிணக்க பொறிமுறை ஆரம்பிக்கப்படுவதானது தமிழர்களையும், அவர்களின் பிரதிநிதித்துவங்களையும் பலவீனப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுவதற்கும் அதிகளவான சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆகவே வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதையும், அவர்கள் தமது இழந்த இறைமையை மீறப் பெறுவதற்காக சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். தற்போது இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையில் சர்வதேச நாடுகள் அதன் மீட்சிக்காக கை கொடுக்கின்றன. ஆனால் அவை எந்தவிதமான நிபந்தனைகளையும் வழங்குவதில்லை.

ஆகக் குறைந்தது, தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்தல், பௌத்தத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் அபகரிப்புக்களை நிறுத்தல் உள்ளிட்ட உடனடியான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நிபந்தனைகளை அல்லது அழுத்தங்களை பிரயோக்க வேண்டும் என்றார்.

செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தருமலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் தெரிவிக்கையில், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணாது நல்லிணக்க முயற்சிகள் வெற்றி அளிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. விசேடமாக, நில அக்கிரமிப்பு, காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம், பௌத்த சமயத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் உள்ளிட்டவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதே போன்று பிரதானமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி வழங்கும் செயற்பாட்டில் முன்னேற்றகரமான நிலைமைகள் காணப்படாத நிலையில் பொறுப்புக்கூறல் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே பொறுப்புக்கூறுவதற்கான பொறிமுறையும் அவசியமாகின்றது என்றனர்.

செல்வராசா கஜேந்திரன், தெரிவிக்கையில், நல்லிணக்கம் தொடர்பான முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். உங்களுடைய கோட்பாட்டின்படி அனைத்து இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்தி சமாதானத்தை கட்டியெழுப்புவது நல்லொதொரு முயற்சியாக இருந்தாலும் இலங்கையில் அவ்விதமான நிலைமைகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற சூழல் காணப்படவில்லை. பெரும்பான்மை சிங்களவர்கள், தமிழர்களும், முஸ்லிம்களும் சிறுபான்மை சமூகத்தினர் அவர்கள் ஒரு தேசிய இனத்தினர் என்பதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை. அவர்களைப் பொறுத்த வரையில், இலங்கை, சிங்கள, பௌத்த நாடு அந்த அடையாளத்துக்கள் தமிழர்கள் உள்ளிட்ட ஏனையவர்களும் கரைந்து விட வேண்டும் என்றே கருதுகின்றனர்.

அது மட்டுமன்றி ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தவே முனைகின்றனர். எம்மைப் பொறுத்த வரையில் ஒற்றையாட்சிக்குள் தமிழர்களுக்கு எந்த தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாது. 13ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்குவதும் பயனற்றது. ஏனென்றால் 30இற்கும் மேற்பட்ட வழக்குகளினால் 13ஆவது திருத்தச்சட்டத்தில் அதிகாரங்கள் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமான உரையாடலை ஆரம்பிப்பதாக இருந்தால் ஒற்றையாட்சியை முழுமையாக நீக்க வேண்டும்.

அதேபோன்று தமிழர்களின் அடையாளங்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போதும் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக, இரண்டு தினங்களுக்கு முன்னதாக நானும் எனது கட்சித்தலைவரும் மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை கால்நடையாளர்கள் பிரச்சினைகளை ஆராய்வதற்காக நேரில் செல்வதற்கு முனைந்த போது, படையினர் தடுத்து நிறுத்தினர். பின்னர் அங்கே அம்பிட்டிய தேரர் சமூகமளித்து பதற்றங்களை ஏற்படுத்தினார். ஆனால் படையினர் தேரரின் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை.

இவ்வாறு தான் பாரபட்சமான நிலைமைகள் நீடிக்கின்றன. ஆகவே எம்மைப் பொறுத்த வரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதாக இருந்தால் உள்நாட்டுக்குள் முன்னெடுக்கப்படும் எந்தவொரு பொறிமுறையாலும் பலன்கள் ஏற்படப் போவதில்லை. அந்த வகையில் இலங்கையை சர்தேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயத்தின் முன்பாகவோ நிறுத்துவதன் ஊடாக மட்டுமே நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநிறுத்த முடியும். அந்த வகையில் உள்நாட்டில் முன்னெடுக்கப்படுவதற்கு தயாராகும் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையினால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் ஏற்படுமென நாம் கருதவில்லை. அது காலம் கடத்தும் செயற்பாடாகவே அமையும் என்றார்.

# வடக்கில் சிக்கிய போதைப் பொருட்கள்: அதிர்ச்சித் தகவல்கள்

வடக்கில் போதைப் பொருட்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்களின் தொகுப்பு இது.

## முல்லைத்தீவில் கஞ்சாவுடன் கணவன் மனைவி கைது

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகிலே கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து தனது வீட்டில் 914 கி.கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த 34 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து முள்ளியவளை புதரிகுடா பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 26 வயதுடைய கணவன் மனைவி இருவரையும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வைத்து 214 கி.கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

இவர்களுக்கான பிரதான விநியோகஸ்தர்களை தேடும் பணிகளோடு குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற முல்லைத்தீவு பொலிஸார் குறித்த நபர்களை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## கொரியர் மூலம் போதைப் பொருள் விற்ற மருத்துவ மாணவர் கைது

கொரியர் தபால் சேவையின் ஊடாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒருவர் கோப்பாய் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 03ம் ஆண்டில் கல்வி கற்கும் 23 வயதுடைய சியம்பலாவெவ, ரம்பேவ பிரதேசத்தில் வசிக்கும் மாணவனொருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் 45 மயக்க மருந்து மாத்திரைகளை வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணின் ஆடைக்குள் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது

யாழ் வடமராட்சி துன்னாலை கிழக்கு பகுதியில், 51 வயதுடைய பெண்ணொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். தனது ஆடைக்குள் போதைபொருளை மறைத்து வைத்திருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 06கி.கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 18000 போதை வில்லைகளுடன் கைது

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போதை வில்லைகளுடன் இருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த இருவரிடமிருந்து 18, ஆயிரம் போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தோட்டவெளி , தாழ்வுபாடு பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. கைப்பற்றப்பட்ட போதை வில்லைகளின் பெறுமதி 21 இலட்சம் ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். அத்துடன் போதை வில்லைகளும் ஒப்படைக்கப்பட்டுள்து.

## பாடசாலைக்கு அருகே போதைப்பொருள் விற்ற இளைஞன்



யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். பாடசாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்து வந்த ஹட்டன் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமைய குறித்த இளைஞனை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 5கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இளைஞனை முற்படுத்திய போது பொலிஸாரால் சந்தேகநபரை இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபருடன் போதைப்பொருள் விற்பனை வலையமைப்பை சேர்ந்தவர்களை மற்றும் போதைப்பொருளை வாங்கியவர்களை இனம் கண்டு கொண்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்ற 6 பேர் கைது

யாழ்.புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில், மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் போதை கலந்த பாக்குகள் மாவா பாக்கு உள்ளிட்ட போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் 06 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடம் அவற்றை வாங்கி வந்த மாணவர்களை பொலிஸார் இனம் கண்டு கொண்டனர். அவ்வாறு இனம் காணப்பட்ட சுமார் 15 மாணவர்களையும் பொலிஸார் கடுமையாக எச்சரிக்கை செய்து, போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டி பெற்றோர்களிடம் கையளித்துள்ளனர். கைது செய்யப்பட்ட 06 இளைஞர்களையும் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# உலகத்தமிழர் பேரவையின் நகர்வும் ஈழத்தமிழரசு அரசியலும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கை அரசியலில் அதிக திருப்பங்கள், நிகழ்வுகளாக மாறி வருகின்றன. அதனை அடையாளம் காணமுடியாது ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் அங்கலாய்த்து கருத்துகளைப் புனைகின்றனர். இத்தகைய புனைவுகளே ஒரு நூற்றாண்டு காலமாக ஈழத்தமிழரது அரசியல் மீதான சிதைவுகளுக்கு வழி வகுத்துள்ளது. மீளவும் அத்தகைய புனைவுகளுக்கு இடங் கொடுத்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையை செய்வது அவசியமானது.

ஈழத்தமிழரது அரசியலில் பிரதான நிகழ்வுகள் கடந்தவாரம் பதிவாகியுள்ளன. அதன் பிரகாரம் உலகத் தமிழர் பேரவையின் ஈழத் தமிழருக்கான அரசியல் பற்றிய உரையாடல் மற்றும் மீண்டும் நல்லிணக்க அரசியலுக்கான முனைப்புகள் பற்றிய கலந்துரையாடல்கள் என்பன நடைபெற்றுள்ளன. இக்கட்டுரையும் அத்தகைய முயற்சிகள் தொடர்பில் காணப்படும் புனைவுகளுக்கு அப்பாலுள்ள யதார்த்தத்தை தேடுவதாக அமையவுள்ளது.

உலகத் தமிழர் பேரவையும் பௌத்த, மதகுருமாரும் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நேபாள நாட்டிலுள்ள நாகர்கோட் நகரில் நடத்திய ஆரம்பகட்ட பேச்சு வார்த்தைகள் பரஸ்பரம் கட்டமைப்பை உருவாக்குவதற்கு வழி வகுத்தன. புலம் பெயர் அமைப்புகள் இலங்கையில் பௌத்த மத அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளடக்கிய உரையாடல் நேபாளத்தில் நடைபெற்றமையால் இமாலய பிரகடனம் என அழைக்கப்பட்டது.

இப்பிரகடனம் 6 அம்ச அறிக்கையாக வெளியானதுடன், இலங்கையின் ஜனாதிபதி மற்றும் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மத அமைப்பினரையும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியிருந்தனர். இரு தரப்பும் இணைந்து வெளியிட்ட 6 அம்சக் கோரிக்கையையும் முதலில் தெரிந்துகொள்ள முயற்சிபோம்.

1. எந்தவொரு சமூகமும் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவோ, அதன் அடையாளத்தையும் பெருமையையும் ,ழந்து விடக் கூடிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சாத வகையில் நாட்டின் பன்முகத் தன்மையை பேணிக்காத்து மேம்படுத்தல்.

2. பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களினதும் மற்றையவர்களினதும் ஈடுபாட்டிற்கும் முதலீட்டிற்கும் வசதியாக அமைக்கக் கூடியதாக உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்தும் உகந்த பொருளாதார வகை மாதிரியை தெரிவு செய்வதுடன், இலங்கையை உறுதியான மத்திய தர வருமானத்தை உடைய நாடாக முன்னேற்றும் பாதையில் பயணம் செய்வதை உறுதிப்படுத்துதல்.

3. தனிப்பட்ட உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் உத்தரவாதம் செய்து சகல மக்கள் மத்தியிலும் சமத்துவத்தை மேம்படுத்தக்கூடிய நிறுவனங்களின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி மாகாணங்களுக்கு போதுமான அதிகாரங்களை உத்தரவாதம் செய்யக் கூடிய புதிய அரசியலமைப்பொன்றை வரைதல், அதுவரை அதிகாரப்பரவல் தொடர்பில் தற்போதைய அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நம்பகமான முறையில் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

4. ஐக்கியப்பட்டதும் பிளவுபடாததுமான நாட்டுக்குள் மக்களின் மத, கலாசார மற்றும் அடையாளங்களை ஏற்றுக் கொண்டு மதித்து அதிகாரங்களை பரவலாக்கி ,னக் குழுக்களுக்கும் மதக் குழுக்களுக்குமிடையில் நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் உருவாக்குவது பற்றி பாடுபடுதல்.

5.மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை வளர்க்கக் கூடியதும் கடந்தகால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்வதில் பற்றுறுதியுடன் கடந்த கால அவலங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தல், பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறைகளைக் கொண்டதுமான இலங்கையை உருவாக்கும் நோக்குடன் செயல்படுவது.

6. இருதரப்பு மற்றும் பல்தரப்பு சர்வதேச



உடன்படிக்கைகளின் கடப்பாடுகளை மதித்து சுதந்திரமானதும் உரிமம், ஊக்கமும் நிறைந்த வெளியுறவுக் கொள்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்த உலகில் சமாதானமும் வளமும் கொண்ட நாடுகள் மத்தியில் பெருமைக்குரிய ஓரிடத்தை இலங்கை பிடிப்பதை உறுதி செய்தல்.

விசாகா தர்மதாசவின் அனுசரணையுடன் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரியவருகிறது. இந்த உரையாடலும் அறிக்கையும் மிக தரம் வாய்ந்த முயற்சியாகத் தோன்றுகிறது. இவ்வகை முயற்சிகள் அவசியமானவை. தென்னிலங்கையுடன் ஈழத்தமிழர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற விவாதம் நியாயமானதாகவே உள்ளது. ஆனால் அதிகமான சந்தேகங்களை எழுப்ப ஆரம்பித்துள்ளது. அதனை விரிவாக புரிதல் வேண்டும்.

முதலாவது, 6 அம்ச அறிக்கை இரு இனங்களுக்குமான நம்பிக்கையையும் பொறுப்புக்கூறலையும் முதன்மைப்படுத்துகிறது. அத்தகைய எண்ணம் சரியானது. ஆனால் அதற்கான நம்பிக்கையையும் பொறுப்புக் கூறலையும் ஈழத்தமிழர்கள் தட்டிக் களித்தார்களா என்ற கேள்வி முக்கியமானது. உடன்பாடுகளைச் செய்து விட்டு மீறியது எத்தரப்பு என்பதும் படுகொலைகளையும் இன அழிப்பையும் மேற்கொண்ட தரப்பு எதுவென்பதும் விளங்கிக் கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் தென்னிலங்கை ஆட்சியாளர்களே கடந்த காலம் முழுவதும் மேற்கொண்டார்கள் என்பது உலகத்திற்கும் உலக தமிழர் பேரவைக்கும் மற்றும் அஸ்கிரிய-மல்வத்த தேரர்களுக்கும் நன்கு தெரியும்.

ஜெனீவாவில் முன் வைக்கப்பட்ட பொறுப்புக்கூறலைக் காட்டிலும் இது வொன்றும் தனித்துவமானதல்ல. அது கூட உலகளாவிய அரசுகளின் அனுசரணைகளால் மேற்கொள்ளப்பட்டது. இது அரசாங்கத்தாலோ அல்லது அரசு அங்கீகரித்த தரப்புகளாலோ மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. அரசாங்கங்களால் செய்யப்பட்ட உடன்பாடுகளையே கிளித்தெறிந்த தென்னிலங்கை இதனையெல்லாம் கருத்தாகக் கொள்ளுமா என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இரண்டு, இது பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் புலம் பெயர்ந்த தமிழர்களை பயன்படுத்தும் உத்தியோடு நகர்த்தப்படுவதாகவே தெரிகிறது. 6 அம்ச அறிக்கையிலும் அனேகமான பகுதி இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டதே அன்றி, இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட, அழித்தொழிக்கப்பட்ட ஈழத்தமிழரது வாழ்வையும் இருப்பையும் பாதுகாப்பதற்கு எந்தப் பகுதியும் முன்வைக்கப்படவில்லை.

இரு இனத்தையும் சமமாக மதிக்கும் உரையாடலாகத் தெரிகிறதே அன்றி, பாதிக்கப்பட்ட இனத்தின் பக்கம் செய்ய வேண்டியவற்றை அறிக்கை முன்வைக்கவில்லை. அதனால் தான் அதிக சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஈழத்தமிழர் மீதான போரினாலேயே இலங்கைத் தீவின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது என்பதை உணர்வதாகவோ, அதற்கு தீர்வு காண்பதன் மூலம் பொருளாதாரத்தை கட்டி வளர்க்கலாம் என்ற விவாதம் எதனையும் அறிக்கையிலோ உரையாடலிலோ காணப்படவில்லை.

மூன்று, இக்குழுவினரது அறிக்கை மட்டுமல்ல அவர்களது சந்திப்புகளும் உரையாடிய தரப்புகளும் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் பௌத்த மதகுருமாருக்கும் சாதகமான தரப்புடனான



தாகவே அமைந்திருந்தது. ஓரிரு சந்தர்ப்பங்களைத் தவிர வடக்கிலும் கிழக்கிலும் அத் தரப்பினரது சந்திப்புகள் துயரத்தையும் பாதிப்புகளையும் எதிர் கொண்ட தரப்புகளை தவிர்த்துக் கொண்டுள்ளதை கண்டு கொள்ள முடிந்தது. நீண்ட நிலைத்திருக்கும் இன முரண்பாட்டுக்கு ஒரு தீர்வினை நோக்கி பயணிப்பதென்பது பாதிக்கப்பட்ட தரப்புகளை சார்ந்த உரையாடலாக அமைந்திருக்க வேண்டும், அத்தகைய வாய்ப்புகள் எதனையும் ,ந்தக் குழுவினர் மேற் கொள்ளாதது தென்னிலங்கையின் நலன்களை நிறைவு செய்யும் நகர்வென்பதை கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. குறிப்பாக வடக்கில் பிரதான அரசியல் கட்சியின் தலைமைக்காக போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினரது நிகழ்ச்சி நிரலிலேயே சந்திப்புகள் நிகழ்ந்ததாகவும் ஜனாதிபதியின் தேர்தல் இலக்காக் அமைந்துள்ளதாகவும் தெரிகிறது. தமிழ் மக்களின் வாக்குகள் இலக்காகக் கொள்ளப்படுகிறது என்ற தெளிவைத் தர முயல்கிறது.

நான்கு, இதன்மூலம் புலம்பெயர் அமைப்புகள் மீதான கரிசனை புலத்திலுள்ள தமிழர்களுக்கு அருகத் தொடங்கியுள்ளது. 2009களுக்குப் பின்னர் புலம் பெயர் தமிழர்களிடமே ஈழத்தமிழரது அரசியல் வலு அமைந்திருந்தது. ஈழத்தமிழரது தேசிய இனப்பிரச்சினை என்பது சர்வதேசப் பிரச்சினையாகவே பரிமாணமெடுத்திருந்தது. தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் சர்வதேசப் பிரச்சினை என்ற யதார்த்தத்தைக் கொண்டது என்பது புலம் பெயர் தரப்பினரால் நகர்வுகளில் உணர முடிந்தது. அதற்கான வாய்ப்புகளை போலி துவாரகா மூலமும் உலகளாவிய தமிழரின் அனுசரணையில்லாத உலகத் தமிழர் பேரவையின் போலி வாதங்களாலும் பலவீனமடையத் தொடங்கியுள்ளது.

இதனை தென்னிலங்கை, திட்டமிட்டே நகர்த்தியுள்ளதென்பதையும் அதற்கு ஒரு தேசிய இனத்தின் இருப்பை அத்தரப்பு பலவீனப்படுத்தியுள்ளது என்பதையும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது. எனவே உலகத் தமிழர் பேரவையின் முயற்சிகள் சரியான முறையில் திட்டமிடப்படவில்லை என்பது அதன் போக்குகளைக் கொண்டு கண்டு கொள்ள முடிகிறது. எத்தகைய அடிப்படையுமின்றி தீர்வுக்கான முயற்சிகளை சாத்தியப்படுத்த முடியுமெனக் கருதுவது பலவீனத்தின் பிரதிபலிப்பு மட்டுமல்ல எதிரிக்கு சேவையாற்றுவதாகவே அமையும். ஈழத்தமிழரது அரசியலில் புலம்பெயர் தமிழரது பலம் காணாமல் போகும் நிலையை எட்டியுள்ளது. இது தென்னிலங்கை அரசியலுக்கு கிடைத்துள்ள வாய்ப்பாகவே தெரிகிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும். யோசனைகளை அலுவலகத்திலும் குடும்பத்திலும் மதிப்பார்கள். குடும்பத்தில் உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில் செய்பவர்கள் உங்கள் வியாபாராத்தை பெருக்கும் காலமிது.

ரிஸபராசி அன்பர்களே! எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவும், பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். தங்கள் உடல் நிலை சிறப்பான முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. . தொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யும் போது மனைவியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

மிதுனராசி அன்பர்களே! மிகுந்த பொருட்செலவில் சுபவிரயங்கள், எடுத்த காரியங்களில் தடை, எதுவுமே நேர்மாறாக இருப்பது என கடந்த காலங்களை மிகுந்த சிரமத்துடன் கழித்தீர்களல்லவா, இனி வரும் காலம் மிகவும் நல்லகாலம். உங்கள் பேச்சை நீங்களே கேட்காமல் இருந்து வந்த நிலைமை மாறும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து பேசுவது நல்லது. துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்

கடகராசி அன்பர்களே! தடங்கல்கள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நல்ல நல்ல விஷயங்கள், விஷேசங்கள் நடக்கும். உங்கள் தைரியத்திற்கு இறைவனை வேண்டுங்கள். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டும். முன்னோர்களை அமாவாசை தோறும் வழிபடவும். தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகள் செய்யும் போது கவனம் தேவை. அனுபவமிக்கவர்களுடன் கலந்து ஆலோசித்து முதலீடு செய்வது நலம்.

சிம்மராசி அன்பர்களே! தீவிர முயற்சியால் தடைபட்டிருந்த திருமணம், கல்வி, என தடையாக இருந்த அனைத்து காரியங்களும் தடைகள் விலகி ஒன்றன் பின் ஒன்றாக சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் நடை பெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.

கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளை இரு மடங்காக்குங்கள், வெற்றிகள் உங்களைத் தேடி வரும் காலமிது. உங்கள் பொன்னான நேரத்தை அடுத்தவருக்காக வீணாக்காதீர்கள். அடுத்தவரை பற்றி பேசா விட்டாலும் நீங்கள் கூறியதாக சிலர் பற்ற வைக்க கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது.

துலாம்ராசி அன்பர்களே! நல்ல விஷயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விஷயங்களில் அவசரம் வேண்டாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். தொழிலில் லாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்ய தகுதியானவர்களின் ஆலோசனைகளை பெற்று செய்யவும். உத்யோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை.

விருச்சிகராசி அன்பர்களே! கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையும். உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகள் செய்ய தயங்க வேண்டாம். தாய் தந்தையரை வணங்கி எந்த காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே.



தனுசுராசி அன்பர்களே! வீடு, மனை வாங்க தடை, சுபகாரியம் செய்வதற்கு தடை, நற்செயல்கள் எது செய்வதற்கும் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.

மகரராசி அன்பர்களே! தைரியமாக எதையும் எதிர் கொள்வீர்கள். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகளில் யாரையும் நம்பவேண்டாம். நல்ல நண்பர்களால் ஆதாயம் நல்ல மதிப்பு கிடைக்கும்.

கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்திருந்த தனலாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் செய்பவர்கள் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வது அவசியம்

மீனராசி அன்பர்களே! வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். இயந்திரங்கள், நீர்நிலைகளில் கவனம் தேவை. சோம்பல் கூடவே கூடாது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நண்பர்கள் உதவிகள் செய்வர். லாபகரமான முதலீடுகள் செய்வீர்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## எம்மால் இலங்கைக்கு அழுத்தங்களை....

((3ம் பக்கத்தொடர்ச்சி) அதேபோன்று அரசாங்கம் சார்பில் தெரிவிக்கும் விடயங்களையும் நாம் ஏனைய தரப்பினருக்கு எடுத்துரைப்போம். அதனைத் தவிர்த்து நாம் எந்தவொரு தரப்பினருக்கும் அழுத்தங்களை பிரயோகிக்கப் போவதில்லை.

எம்மைப் பொறுத்த வரையில், உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம். விசேடமாக எமக்கு காணப்படுகின்ற முன் அனுபவங்கள் விசேடமாக நிலைமைகளை கையாண்ட சூழல்கள் ஆகியவற்றை நாம் பகிர்ந்து கொள்வதற்கு தயாராகவுள்ளோம்.

மேலும் தங்களால் (தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால்) குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் சம்பந்தமாக அரசியலமைப்பு மாற்றத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அது உள்நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயமாகும். அதில் நாம் தலையீடுகளைச் செய்யப் போவதில்லை.இதனை விடவும், பாதிக்கப்பட்ட மக்களின் உட்கட்டமைப்பு மேம்பாடுகளுக்காக நாம் தொடர்ச்சியான பங்களிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம் என்றனர்.

## கனடாவில் கொன்சவேர்ட்டிவ் கட்சி

(3ம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத்துவோம். இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் உறுப்பினர்களை இனப்படுகொலைக்காக இனம் கண்டு சட்டநடவடிக்கைகளிற்கு உட்படுத்தலாம். தமிழர்களிற்கு எதிராக தொடரும் இனப்படுகொலை நடவடிக்கைகளிற்காக இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து கண்டிப்போம் தனிமைப்படுத்துவோம் என்றார்.

## தமிழர் இராஜதந்திரம்

(5ம் பக்கத் தொடர்ச்சி) தனிமைப்படுவதை தடுக்க முடியுமென்றால், அது இந்தியாவால் மட்டும் தான் முடியும். இதனைக் கருத்தில் கொண்டு தான், இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு பாலசிங்கம் நேர்காணல் ஒன்றை வழங்கி முன்னைய தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொண்டார். ஆனால் பாலசிங்கம் இந்தியாவை நோக்கி திரும்பிய காலத்தில் நீர் அதிகம் பாலத்திற்கு கீழ் ஓடி விட்டது. நிலைமைகள் கை மீறிப் போய் விட்டன. பாலசிங்கத்தின் இறுதிக் கால பங்களிப்பு ஒரு வகையில் பெறுமதியானது. அதாவது, நீங்கள் எங்கும் செல்லலாம், ஆனால் அருகிலிருக்கும் பிராந்திய சக்தியான இந்தியாவின் ஆசீர்வாதம் இல்லா விட்டால் எதுவும் அசையாது. இந்தியா இன்றி ஈழத் தமிழர் விடயத்தில் எதுவும் அசையாது. இப்போதும் இந்தியாவை எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்களா?

## பின்னிப் பிணைந்த பாதுகாப்பு

16ம் பக்கத் தொடர்ச்சி) இனியும் தடுப்பதற்கே முற்படும் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஏனென்றால் இலங்கையை தன்னிடம் இருந்து பிரித்துப் பார்க்க இந்தியா முனையவில்லை. இலங்கையினதும் இந்தப் பிராந்தியத்தினதும் பாது சுகாப்பை தனது பாதுகாப்பில் இருந்து வேறுபடுத்த இந்தியா தயாராக இல்லை. இப்போதைய நிலையில், இலங்கையில் இருந்து சீனாவினால் இந்தியாவுக்கு வரக் கூடிய அச்சுறுத்தலை மாத்திரம் அது கரிசனையுடன் நோக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கையில் காலூன்ற முனையும் சீனாவினால் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்றே ந்தியா பார்க்கிறது. ஆனால், சீனக் கப்பல்களால் இந்தியாவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் அச்சுறுத்தல் ஏற்படும் என்று இந்தியா அச்சம் கொள்கிறது என்ற புரிதலுடனேயே இலங்கை இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்தியாவோ, இந்தக் கப்பல்களால், இலங்கைக்கும் ஆபத்து வரும் என்றே கருதுகிறது. இதுபோல வேறுபட்ட பார்வை நிலையில் தான் 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.ஆரும் இருந்தார். கடைசியில் அவர் இந்தியாவிடம் சரணடைந்தார். அது போல சீனா விவகாரத்திலும் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் சரணடையும் நிலை வரலாம். ஏனென்றால் இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு எல்லைக் கோட்டை வைத்திருக்கிறது.

## கொலைக் கலர்சாரம் ராஜபக்ஷ குடும்பத்திற்கு புதிய விடயமல்ல

கொலைக் கலாசாரம் என்பது ராஜபக்ச குடும்பத்துக்குப் புதிய விடயமல்ல. பஸில் ராஜபக்சவின் மொட்டுக் கட்சி மாநாட்டு உரை இதனையே வெளிப்படுத்துகின்றது என மிகிந்தலை விகாரையின் விகாராதிபதியான வலவாஹேனுனவே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த மாநாட்டில் பங்கேற்றவர்களை உடனடியாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

எம் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தினால் என்ன நடக்கும் என்பது பற்றி பஸில் ராஜபக்ச எச்சரிக்கை விடுத்திருந்தார். அதாவது கொலை செய்யப்படுவீர்கள் என்பதே அந்த எச்சரிக்கையாகும். ராஜபக்சக்கள் சாட்சி இல்லாமல் கொலை செய்தனர். இது எமக்கு தெரியும்.

எவராவது ஒருவர் தலை தூக்கினால் அவரைக் கொலை செய்தனர். கொலைக் கலாசாரத்தை அவர்கள் முன்னெடுத்தனர். இந்தக் கலாசாரத்தை அவர்களுக்கு மீண்டும் வழங்குவதா? சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி மாநாட்டுக்குச் சென்றவர்களை உடனடியாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்கள் திண்டாடும் நிலையில், மனச்சாட்சி உள்ள எவரும் அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்க மாட்டார்கள். எனவே அவர்களின் மனநிலை புரிகின்றது. எனவே மொட்டுக் கட்சி மாநாட்டில் பங்கேற்றவர்களை உடனடியாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தவும். இது தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.' என்றார்.



# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# முருகனை லண்டனுக்கு அனுப்ப இந்தியா மறுப்பு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து விடுதலையான முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உட்பட ஏழு பேரை விடுதலை செய்து 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன் உள்ளிட்டோர் அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால் கவுச்சீட்டு கேட்டு விண்ணப்பிப்பதற்காக திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று வருவதற்கு பாதுகாப்பு வழங்க, சென்னை காவல்துறைக்கு உத்தர விடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் முருகன் மனு தாக்கல் செய்தார் இந்த மனு நீதிபதிகள் கிருஷ்ணகுமார் தனபால் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு தரப்பில் கூடுதல் சொலிசிடார் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் முன்னிலையாகி, கொலை வழக்கில் குற்றவாளியான இலங்கையைச் சேர்ந்த முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது எனவும், இலங்கை நாட்டின் துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே அந்த நாட்டுக்கும் திருப்பி அனுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

தமிழக அரசு தரப்பில் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முருகனை அழைத்து வர காவல்துறை பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், முருகனுக்குப் பயண ஆவணம் வழங்குவதற்கான நேர்காணலுக்கு இலங்கை தூதரகம் அழைக்கும் போது முருகனுக்குப் பாதுகாப்பு வழங்க உத்தர விட்டு, வழக்கை முடித்துவைத்தனர்.

## யாழ்.பல்கலைக்கழக கலாசாரத்தை கெடுக்க வந்த அரைக்காற் சட்டைக்காரர்

சர்வதேச திரைப்பட விழாவின் சில திரைப்படங்கள் யாழ். பல்கலைக் கழகத்திலும் திரையிடப்படுகின்ற நிலையில், அரைக் காற்சட்டையுடன் செவ்வாய்க்கிழமை வந்த ஒருவரை அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்கலைக் கழகத்துக்குள் அனுமதிக்க மறுத்துள்ளனர்.

இதன் போது அரைக் காற்சட்டையுடன் வந்தவருடன் உடனிருந்த சிலர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டு அதனைக் காணொளி எடுத்து அச்சுறுத்தி பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முயன்றுள்ளனர். இதன்போது அங்கு வந்த பல்கலைக்கழக பதிவாளரும் அதே நிலைப்பாட்டைத் தெரிவிக்கவே, ஏமாற்றமடைந்த குறித்த குழு பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அங்கிருந்து சென்றுள்ளது. குறித்த குழுவினர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்ட காணொளியை சமூக வலைத் தளங்களில் பதிவேற்றி 'யாழ் பல்கலைக்கழகத்தின் கலாசாரம் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருப்பவர்களின் காற்சட்டையில் தொங்கிக் கொண்டிருப்பது தான் துயரம்' என தெரிவித்து பகிர்ந்துள்ளனர்.

இந்நிலையில் கடமைக்கு இடையூறு விளைவித்ததன் அடிப்படையில் குறித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விடுத்துள்ள கோரிக்கையும் சமூக வலைத் தளங்களில் வலுத்து வருகிறது.

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.